
# சாரணர் கற்கை நெறி




சுப்பிரமணியம் புவன்

796
புவன்
SLIPR.

# சாரணர் கற்கை நெறி

ஆக்கம்

சுப்பிரமணியம் புவன்
(குழுச் சாரணத்தலைவர் இந்துக் கல்லூரி கொழும்பு)

இந்துக் கல்லூரி கொழும்பு
சாரணர் பெற்றோர் குழுமச்சபை

| | | |
|---|---|---|
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| நூலின் பெயர் | : | சாரணர் கற்கை நெறி |
| ஆக்கியோன் | : | சுப்பிரமணியம் புவன்<br>குழுச் சாரணத்தலைவர்<br>இந்துக் கல்லூரி கொழும்பு |
| முதற்பதிப்பு | : | 1997 |
| மொழி | : | தமிழ் |
| பக்கங்கள் | : | 102 |
| வெளியிடுவோர் | : | இந்துக் கல்லூரி கொழும்பு<br>சாரணர் பெற்றோர் குழுமச்சபை |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே<br>இந்நூலில் வரும் வரைபடங்களைப் பயன்படுத்த விரும்புவோர் அதற்கான அனுமதியைச் சித்திர ஆசிரியரிடமிருந்தே பெறல் வேண்டும். |
| படங்கள் | : | M.N. சம்டீன். |
| அச்சகம் | : | அஸ்ரன் பதிப்பகம். |
| விலை | : | 150.00 |

************************************************************************************************

| | | |
|---|---|---|
| Edition | : | First Edition |
| Title | : | Scouting - A Course Guide |
| By | : | Subramaniam Bhuvan<br>Group Scout Leader<br>Hindu College Colombo. |
| First Edition | : | 1997 |
| Language | : | Tamil |
| Pages | : | 102 |
| Publisher | : | Hindu College Colombo.<br>Scout's Parent's Group committee. |
| Copy Right | : | Author<br>Those wishing to copy the sketches and drawings Found in this book should obtain permission from Mr. M.N. Samdin. |
| Sketches | : | M.N. Samdin. |
| Printers | . | Astan Publications. |
| Price | : | 150.00 |
| I S B N | | 955 - 9563 - 00 - 9 |

# சமர்ப்பணம்

என்

அருமை அப்பாவின்

அகலா நினைவுக்கு ..........



சுழிபுரம்

நவரத்தினம் சுப்பிரமணியம்

(14.04.1932 - 22.07.1980)

கணக்காளர்,

ஸ்ரஸன் எக்ஸ்போட்

(பிறைவேற்) லிமிற்றேட். கொழும்பு.

"நலந் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்

உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்"

# முன்னுரை

சாரணீயத்தில் அடி எடுத்து வைப்பவர்களுக்கும் சாரணீயத்தினை தமிழ் மொழி மூலம் போதிப்பவர்களுக்கும் வழிகாட்டுவதாக அமைந்துள்ள இந் நூல் வரவேற்கப்படவேண்டிய ஒன்றாகும்.

ஏனைய சேவையாளர்களிலும் பார்க்க சாரணீயப் பணி உன்னதமான தொன்றாகும். சீரிய சிறந்த தன்னலமற்ற இப்பணியில் ஈடுபட்டிருக்கும் சாரணீயத்தினர் ஒழுங்கு, கடமை, கட்டுப்பாட்டுடன் தம்மைத் தாமே அர்ப்பணிக்கக்கூடிய தியாக சிந்தனை படைத்த இலட்சியங்களைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

சாரணீயக் கட்டுக்கோப்பிற்கிணங்க சிறந்த ஒழுக்கம், கீழ்ப்படிவு, பெரியோரை மதித்தல், மரியாதை செய்தல் முதலியவற்றுடன் தாம் சேவை செய்யும் அமைப்பின் இடத்தின் தன்மையையும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

சாரணீயத்தில் ஈடுபடுவோர்க்குப் பலவிதமான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு பயிற்சி பெறுவோர் தமது அறிவை வளம் படுத்திக் கொள்வதற்கு உதவக்கூடிய சாரணீய நூல்கள் தமிழில் அரிதாகவே உள்ளன. தமிழில் எழுதப்பட்ட இந்நூல் இக்குறையை நிவர்த்தி செய்யும் என்பது எனது நம்பிக்கை. சாரணீயத் தத்துவங்கள் சாரும் அம்சங்களைக் கொண்டுள்ள இந்நூல் சாரணீயத்துடன் தொடர்பு கொண்டோருக்கு ஒரு கைந்நூலாகவும் விளங்கக் கூடும்.

சாரணசத்தியப் பிரமாணத்துடன் தொடங்கும் இந்நூல் சாரணவிதிகள், சாரண நிகழ்ச்சித் திட்டம், அங்கத்துவச்சின்னம், சாரண விருது, மாவட்ட ஆணையாளர் கட்டிழை போன்ற பல அம்சங்களைக் தன்னகத்தே கொண்ட நூலாக சாரணர் கற்கை நெறி அமைகின்றது.

தொகுத்துப் பார்க்கையில் சாரணீயக் கலையை மேற்கொள்ளும் அனைவருக்கும் பயன் தரக்கூடிய பல கருத்துக்கள் வழிகாட்டல்கள் கோட்பாடுகள் என்பவற்றை தன்னுள் அடக்கி “சாரணர் கற்கை நெறி” என்ற பெயர் காரணமாக இந்நூலின் பயன்பாடு சாரணீயத்தில் ஈடுபடுவர்க்கு மட்டும் தான் எனக் கருதுவது தவறானதாகும். இதில் தரப்பட்டுள்ள பல வழிமுறைகள் (முதலுதவி, வீதி ஒழுங்கு முறை, ஆரோக்கியமான அப்பியாசங்கள்) என்பன வாழ்க்கைக்கு பயன்தரக்கூடியன.

நூலாசிரியர் திரு சுப்பிரமணியம் புவன் இந்துக் கல்லூரி கொழும்பு குழுச் சாரணத்தலைவராக இருந்து, எமது மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கி வருகின்றார். இவர் எமது கல்லூரியின் மாணவராக இருந்த காலத்தில் சிறந்த சாரணராக விளங்கியவர். பல பாசறை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர். 1978 இல் பச்சைக் கயிறு விருது பெற்றவர். 1982 இல் சாரணர்க்குரிய ஜனாதிபதி பதக்கம் பெற்றவர். 1993 இல் “வுட்பட்ச்” விருது பெற்றவர். பாடசாலை மாணவ நிலையில் சாரணன், பாடசாலை விட்ட பின் சாரணீய சேவை நிலையில் சாரணீயப் பயிற்சியாளர், சாரணக் குழுத்தலைவர் ஆகிய மட்டங்களில் தான் பெற்ற அனுபவங்ககளை கொண்டு இந்நூலை எழுதியுள்ளார். அவருடன் பின்னிப் பிணைந்த சாரணீய செயல் அநுபவத்தின் பிரதிபலிப்பை இந்நூலில் காணலாம்.

தமிழ் பேசும் நல்லுலகம் இந்நூலை வரவேற்று ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் என்பது எனது நம்பிக்கை. நாம் கொடுக்கும் ஊக்கமும் ஆக்கமும் இதுபோன்ற பல நூல்கள் தமிழில் உருவாக உந்துசக்தியாக அமையும்.

இந்துக் கல்லூரி கொழும்பு
கொழும்பு - 04.
தொலைபேசி : 586169

த. முத்துக்குமாரசுவாமி
அதிபர்
28.05.97

ශ්‍රී ලංකා බාලදක්ෂ සංගමය
இலங்கைச் சாரணர் சங்கம்
**SRI LANKA SCOUT ASSOCIATION**

# ஆசிச் செய்தி

திரு. சுப்பிரமணியம் புவன் (தரு சின்னம் - **WOOD BADGE**) குழுச்சாரணத் தலைவர் இந்துக் கல்லூரி கொழும்பு தனது சாரணீய 20 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் இந்நூலை வெளியிடுகின்றார். வெளியிடும் சாரணர் கற்கை நெறி என்னும் கைந்நூலுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நூல் புதிதாக சாரணீயத்தில் சேர்ந்த சாரணர்களுக்கு தமது அந்தஸ்து சின்னங்களையோ, அலங்காரச் சின்னங்களையோ பெறுவதற்கு பெரும் உதவியாக இருக்கும். இந்நூல் சாரணர்களுக்கு சின்னங்களைப் பெறுவதற்கு எவ்வளவு ஆழமாக, எவ்வளவு பரப்பளவு கற்கவேண்டுமென வழிகாட்டுகிறது. இந்நூல் சாரணர் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டுமென்பதை வலியிறுத்துகின்றது. ஆகவே இந்நூலை சகல சாரணர்களும் சாரணத் தலைவர்களும் பெற்று சாரணீயத்தில் மிளிர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

இப்படியான ஒரு நூல் இதுவரை காலமும் வெளியிடப்படவில்லை. சாரணச் சிறார்களின் நீண்ட கால அபிலாசையை இது பூர்த்தி செய்கின்றது. இந்தநூலை இந்துக் கல்லூரி கொழும்பு சாரணர் பெற்றோர் குழுமச்சபை முழுச் செலவையும் ஏற்று வெளியிடுகின்றது. இது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இந்த செய்கை ஏனைய சாரணர் குழுமச்சபைகள் எப்படி சாரணர்களுக்கு உதவ வேண்டுமென்பதை எடுத்துக் காட்டுகின்றது. சாரணீயத்தில் சம்பந்தப்பட்ட சகலரும் இந்நூலைப் பெற்று பலன் பெறுவார்களாக.

**28.05.97**

**வீ. குணரத்தினம் B.Sc ; DiP - IN - ED**
இலங்கைச் சாரணர் சங்க
தலைமைக்காரியாலய ஆணையாளர்,
தலைவர் பயிற்றுனர், பிரதிப்பணிப்பாளர்
சாரணீயப் பயிற்சி.

ශ්‍රී ලංකා බාලදක්ෂ සංගමය
இலங்கைச் சாரணர் சங்கம்
SRILANKA SCOUT ASSOCIATION

## Message from chief commissioner

*I congratulate Mr. S. Bhuvan Group Scout Leader Hindu College Colombo on his efforts to produce a much needed book for the Tamil speaking Scouts and also thank the Group Parents commicttee for their magnanimity for their financial assiatance in raising necessary funds to produce this book.*

*I gratefully acknowledge their faith in the Movement and tneir desire to help him building up literature for the Tamil speaking Scouts.*

*My personal thanks to Mr. Bhuvan for his keen interest in this project.*

**M. Mazzahim Mohideen**
Chief Commissioner

29.05.97

✍

SRI LANKA SCOUT ASSOCIATION

## COLOMBO DISTRICT BRANCH

### Message From District commissioner

*The Colombo District Branch of the Srilanka Scout Association is indeed very thankful to the Group Scout Leader Mr. S. Bhuvan for his continued faith in the Movement by bringing out this booklet which will enhance the quality of the Tamil speaking Scouts of our Nation. By spending his leisure in bringing out a publication of this nature he has reiterated his commitment to scouting and scout aims and methods.*

*This new book was a long felt need to improve the standard and efficiency of the Scouts who speak the Tamil language. It will be useful not only to the scouts of the Colombo district but also to the entire country.*

*The Parent's Committee of the 68th Colombo (Hindu college) Scout Group should be applauded for their effort in bringing out his new publication.*

**K.M. Anthony**
**District Commissioner** **28.05.97**

# வெளியீட்டாளர் உரை

நவீன உலகின் வாழ்க்கை முறைக்கேற்ப கல்வித் திட்டங்கள், பாடவிதானங்கள் என்பன மாற்றமடைந்து வருகின்றன. அவ்வாறே சாரண நிகழ்ச்சித் திட்டமும் மாற்றமடைந்துள்ளது. புதிய சாரண நிகழ்ச்சித் திட்டத்திற்கிணங்க சாரணர் தமது கற்கை நெறியை மேற்கொள்ளுவதற்கு தமிழில் ஒரு கைந்நூல் இன்று அவசியத் தேவையாக உள்ளது. அவ்வப்போது பல கைந்நூல்கள் வெளிவந்த போதும் தற்கால தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் பொருத்தமான கைந்நூல் தமிழில் இல்லை.

இக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு திரு. சுப்பிரமணியம் புவன் அவர்கள் மேற்கொண்ட முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. இந்துக் கல்லூரி கொழும்பு 68 வது கொழும்பு சாரணர் குழுவின் ஸ்தாபக அங்கத்தவராகவும் குழுச்சாரணத்தலைவராகவும் சேவை புரிந்து வரும் புவன் அவர்கள் தான் பெற்ற அநுபவங்களைக் கொண்டும் சாரணீயத்தில் உள்ள ஊன்றிய அறிவைக் கொண்டும் இந்நூலை உருவாக்கியுள்ளார். சாரணத் தந்தை பேடன் பவல் பிரபு சாரணர்களிடம் எதிர்பார்க்கும் குணாதிசயங்களைச் செயல் வடிவமாகக் காண்பிப்பதற்கு இந்நூல் ஒரு ஊக்குவிப்பாகவும் முன்னுதாரணமாகவும் விளங்கும் என்பதுதில் ஐயமில்லை.

பல வழிகளிலும் சின்னாபின்னாப்பட்டுக் கொண்டிருக்கும் எமது சமூகம் சீரிய வழியில் செல்வதற்கு சாரணீயம் ஒரு சிறந்த வழிகாட்டியாகும். சாரணன் சிறுவனாக இருக்கும் போதே வாழ்க்கையின் சவால்களைச் சமாளிப்பதற்கு தைரியத்தைப் பெற்றுக் கொள்கின்றான். ஒரு முழுமையான சாரணன் தன்னம்பிக்கையும் ஆழுமையும் நிறைந்தவனாகவும் தன் குடும்பத்திற்கு விசுவாசமுள்ள கடமை வீரனாகவும், தன் சமூகத்திற்கு தோழமை நிரம்பிய தலைவனாகவும், நாட்டிற்கு ஒரு நற்பிரசையாகவும் திகழ்வான். இந்த வகையிலே எமது இளைய தலைமுறையினர் பயன்பெறவேண்டும் என்னும் நோக்கத்தில் இந்நூலை வெளியிடுவதற்கு இந்துக் கல்லூரி கொழும்பு சாரணப் பெற்றோர் குழுமச்சபை முன்வந்துள்ளது. இன்றைய சாரணர்களுக்கும் வருங்கால சாரணர்களுக்கும் இதனை உரிய முறையில் பயன்படுத்தி நன்மை பெறுவார்கள் என்ற நம்பிக்கையுடன் இதனை வெளியிடுகின்றோம்.

இந்துக் கல்லூரி கொழும்பு,
சாரணர் பெற்றோர் குழுமச் சபை.
28.05.97

தி. விஸ்வகுமாரர்.
தலைவர்

# ஆசிரியர் உரை

சாரணீயம் சம்பந்தமாக இன்று தமிழில் மாணவர்கள், ஆசிரியர்கள் பயன்படுத்தக்கூடிய எளிமையும் முழுமையும் கொண்ட ஒரு கைந்நூல் இல்லையென்ற குறையைத் தீர்க்கும் நோக்குடனேயே இந்நூல் தயாரிப்புப் பற்றிய செயற்பாடுகள் ஆரம்பமாகின.

சாரணீயம் என்பது ஒரு வாழ்க்கை முறைமை. அது நம்மைப் பயனுள்ள சமூக மனிதர்களாக்கும் என்பதை நான் எனது 20 வருட சாரணீய வாழ்க்கையின் மூலம் உணர்ந்துள்ளேன்.

அந்த உணர்வு தான் இந்த நூற் பணியை மேற்கொள்ளத் தூண்டியது. தமிழ் மொழியுலகக் கல்வியில் இத்தகைய விடயங்களைப் பற்றி சிந்திப்பதற்கு இடமில்லாது போய்க்கொண்டிருக்கும் இந்நாட்களில் மாணவர்களின் சமூக நோக்கை வளர்க்கவும் சாரணீயத்தை தமிழ் வழி கற்கும் மாணவர்களுக்கு உதவவும் மேற்கொணட ஒரு முயற்சிதான் இது.

எனக்குச் சாரணீயத்தில் உள்ளளவு பயிற்சி தமிழ் எழுத்துத் துறையில் இல்லை. அதன் காரணமாக இந்நூலில் இன்னும் பல திருத்தங்கள் செய்யப்பட வேண்டியிருக்கும். தயவு செய்து அவை பற்றி எனக்குக் கீழே உள்ள முகவரிக்கு எழுதவும். அடுத்து வரும் பதிப்புக்களில் அத்திருத்தங்களைச் செய்யலாம்.

இந்நூலுக்கான தேவையை வற்புறுத்தியவர்கள் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி சாரண மாணவர்கள் இந்தப் பணியில் என்னை ஊக்கியவர்கள் சக சாரணீயத் தலைவர்கள். இவர்களுக்கு எனது நன்றிகள்.

இந்நூலினை சாரணருக்கான தெளிவுடனும், விளக்கத்துடனும் பிரசுரிக்க ஏற்றவகையில் வேண்டிய சித்திரங்களை வரைந்து தந்த ஜனாப் M.N. சம்டீன் அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவிக்க விரும்புகின்றேன். சாரணராக இருந்த அவர் ஒரு சாரண நூலுக்குரிய சர்வதேச தரத்திற்கு ஏற்ற வகையில் இப்படங்களை வரைந்துள்ளார்.

எனது முயற்சியைப் பற்றி அறிந்த கல்லூரி முதல்வர் இதில் பேரார்வம் காட்டினார். ஒரு முன்னுரையையும் தந்துதவியுள்ளார். அவருக்கு எனது நன்றிகள் உரித்து.

தமிழில் இத்தகைய ஒரு நூல் அவசியத் தேவை என வற்புறுத்தி, இந்த நூலை ஆக்குவதற்கு எனக்கு ஊக்கம் தந்த பிரதம சாரண ஆணையாளர், மாவட்ட ஆணையாளர் ஆகிய இருவருக்கும் எனது நன்றிகள்.

இந்த நூல் எமது கல்லூரிச் சாரணர் பெற்றோர் குழுமச் சபையினால் வெளியிடப்படுகின்றது. அவர்கட்கு என் நன்றிகள். இந்த நூலின் வெளிவருகைக்கு முக்கிய காரணராக இருந்த திரு குணரட்னம் அவர்களுக்கும் எனது நன்றிகள்.


38, 33 வது ஒழுங்கை
கொழும்பு - 06.
தொலைபேசி : 582998, 072 - 267894
03.06.97

சுப்பிரமணியம் புவன்
குழுச் சாரணத்தலைவர்
இந்துக் கல்லூரி கொழும்பு

# பொருளடக்கம்

## அங்கத்துவச் சின்னம். (11 வயதுக்கு மேற்பட்டவர்கள்.)


*1. கடப்பாடுகள். (Commitment)*

1.1. சாரணர் சத்தியப் பிரமாணமும் விதிகளும். 26
1.2. சாரணச் சைகைளும் வணக்கமும் வணக்கம் செலுத்தும் வேளைகளும். 27
1.3. சாரணத்தந்தை பேடன்பவலின் வரலாறும் உலக சாரண இயக்கத்தின் வளர்ச்சியும். 29
1.4. இலங்கையில் சாரண இயக்கத்தின் வளர்ச்சி. 32
1.5. பிரத்தியேகத் தினக்குறிப்பேடும் அதைப் பேணலும். 34
1.6. உலக சாரணீய இயக்கத்தில் அங்கத்துவம் வகிப்பது பற்றியும், அங்கத்துவம் பெற வருடாவருடம் கொடுப்பனவு செய்தல் பற்றித் தெரிந்திருத்தல் வேண்டும். 34
1.7. சேமிப்பு. 34

*2. பண்பாடு (Culture)*

2.1. தேசியக் கொடி 34
2.2. தேசிய கீதம். 36

*3. சாரணர் கைத்திறன். (Scout craft)*

3.1. கட்டுக்கள். 37
3.2. குலைவுத் தடை வரிச்சு. 38
3.3. அணிச் செயற்பாடுகள். 39

*4. சௌக்கியம் (Health)*

4.1. ஆள்நிலையில் சௌக்கியம் தரும் பழக்கவழக்கங்கள். 39
4.2. காயத்தைச் சுத்தம் செய்தலும் மருந்து கட்டலும். 39
4.3. தேக நிலை 39
4.4. கட்டளைகள். 40
4.5. ஊதுகுழல் சமிக்கைகளும் கைச்சமிக்கைகளும் 40
4.6. சமூக சுகநலப் பழக்க வழக்கங்கள். 42

*5. சமூகம். (Society)*

5.1. தன்னைச் சுற்றியுள்ள பரந்து பட்ட சூழலைப் பற்றிய ஆராய்வு. 43

*6. துணிவு சேர்செயல்கள் (Adventure)*

6.1. · வெளிக்கள முயற்சி 43

*7. கலைச் சின்னங்கள். (Proficiency Badges)* 43

*8. சேவைக் காலம். (Service)* 43

*9. தகைமை. (Eligibility)* 43


## சாரண விருது (11 · 14 வயது வரை)


*1. கடப்பாடுகள். (Commitment)*

1.1 சாரணர் சத்தியப் பிரமாணத்திற்கும் விதிகளுக்கும் அமைய நடத்தல். 48
1.2 சேமிப்புக் கணக்கு. 48
1.3 பிரத்தியேக தினக்குறிப்பு. 48

*2. பண்பாடு. (Culture)*

| | | |
|---|---|---|
| 2.1 | வெளி விருந்தினர்களும் பங்கு பற்றும் சாரணர் சம்பந்தமான கலை நிகழ்ச்சிகளில் அல்லது சாரணர் பொருட்காட்சியில் அல்லது பாசறைத் தீயில் பங்குபற்றியிருத்தல். | 48 |
| 2.2 | சரித்திரம், கலாச்சாரம், அல்லது கல்வி சம்பந்தமான இடத்திற்கு ஆர்வத்துடன் சென்று அது பற்றி 200 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதல். | 49 |

*3. சாரணர் கைத் திறன். (Scout craft)*

| | | |
|---|---|---|
| 3.1 | கட்டுக்கள். | 49 |
| 3.2 | குலைவுத் தடைவரிச்சு | 49 |
| 3.3 | கயிற்றுக் கலை (முன்னோடிக் கட்டுக்கள்) | 50 |
| 3.4 | திட்டம் தீட்டுதல். 1. பாலம் கட்டுதல். | 51 |
| | 2. கொண்டு செல்லக் கூடிய கொடிக்கம்பம் தயாரித்தல். | |
| 3.5 | கொடி. | 52 |
| 3.6 | கைக் கோடரி. | 53 |
| 3.7 | வனவியல் குறியீடுகள் | 55 |
| 3.8 | திசையறி கருவி | 58 |
| 3.9 | அவதானம். | 59 |
| 3.10 | பதினைந்து பொதுவான மரங்கள் | 59 |

*4. சௌக்கியம். (Health)*

| | | |
|---|---|---|
| 4.1 | தேகப்பயிற்சி | 59 |
| 4.2 | அணிநடை | 61 |
| 4.3 | சமூக சுகநலப் பழக்க வழக்கங்கள். | 61 |

*5. சமூகம். (Society)*

| | | |
|---|---|---|
| 5.1 | அவசரத் தேவைகளுக்கு உதவுதல். | 61 |
| 5.2 | அவசரச் செய்தி | 68 |
| 5.3 | தொலை பேசி | 69 |
| 5.4 | வழி காட்டல் (இடம் தெரியாதோர்க்கு) | 69 |

*6. துணிவு சேர்செயல்கள். (Adventure)*

| | | |
|---|---|---|
| 6.1 | மூன்று இரவுப் பாசறை | 69 |
| 6.2 | சமைத்தல். | 69 |
| 6.3 | நடைப் பயணம். | 69 |

*7. கலைச் சின்னங்கள். (Proficiency Badges)* 69

*8. சேவை. (Service)* 70

*9. தகைமை. (Eligibility)* 70

# மாவட்ட ஆணையாளர் கட்டிழை

(12 - 17 வயது வரை)


## *1. கடப்பாடுகள். (Commitment)*

1.1 சேமிப்பு 73
1.2 பிரத்தியேகத் தினக்குறிப்பேடு 74
1.3 அணித் தினக்குறிப்பேடு 74

## *2. பண்பாடு (Culture)*

2.1 பொழுது போக்குகள். 74

## *3. சாரணர் கைத்திறன். (Scout craft)*

3.1 கட்டுக்கள். 74
3.2 தீ மூட்டும் முறைகள். 75
3.3 முன்னோடி வழியாக்கல். 77
3.4 அடிச்சுவடுகள். 78
3.5 வரைபடம் வரைதல். 79
3.6 மதிப்பீடு 79
3.7 உள்ளாழி வாள், மரச் சம்மட்டி 81
3.8 பறவைகள் 82
3.9 நீச்சல். 82

## *4. சௌக்கியம் (Health)*

4.1 அணி நடை 82
4.2 தொடர்ச்சியான நடவடிக்கைகள் 82
4.3 சமூக சுக நலப் பழக்கவழக்கங்கள். 82

## *5. சமூகம் (Society)*

5.1 வீதி ஒழுங்கு முறையையும் குறியீட்டையும் அறிந்திருத்தல். 83
5.2 தனது வீட்டைச் சுற்றியுள்ள சூழலைப் பற்றிய ஆராய்வு. 87

## *6. துணிவு சேர்செயல்கள். (Adventure)*

6.1 ஏழு இரவுப் பாசறை 87
6.2 நடைப்பயணம். 87

## *7. கலைச் சின்னங்கள். (Proficiency Badges)* 88

## *8. சேவை (Service)* 88

## *9. தகைமை (Eligibility)* 88

அங்கத்துவச்சின்னம் பெறுவதற்கான மாதிரித் தேர்ச்சி அறிக்கை 89

சாரண விருது பெறுவதற்கான மாதிரித் தேர்ச்சி அறிக்கை 90

மாவட்ட ஆணையாளர் கட்டிழையைப் பெறுவதற்கான மாதிரித் தேர்ச்சி அறிக்கை 91

அணி முறைமை 92

அணி என்றால் என்ன? 92

அணிகளின் சபை 92

அணிகளின் சபைக் கூட்டம். 93

அணிகளின் பெயர்களும் நிறங்களும். 93

அணிக்கொடி 94

அணித்தலைவர் பட்டி 94

உதவி அணித்தலைவர் பட்டி 94

பட்டியின் அமைப்பு 94

அணித்தலைவர் சபை 95

அணித்தினக்குறிப்பேடு 96

சீருடையை பராமரிக்கும் முறை 96

கழுத்துப் பட்டியை மடிக்கும் முறை 96

அணித்தலைவர்களுக்கோர் வார்த்தை 97

பெற்றோர்களுக்கோர் வார்த்தை 97

சாரணர் பதக்கங்கள் 98


சாரணர் விருதுக்கான பாடத்திட்டம். 100

15 வயதுக்கு மேற்பட்ட சாரணர் சீருடை 101

15 வயதுக்கு உட்பட்ட சாரணர் சீருடை. 102

சாரணீயம் என்பது கல்வி சம்பந்தமான ஓர் இயக்கமாகும். இளம் சிறார்களை தன்னம்பிக்கை உடையவர்களாகவும் தான் வாழும் சமூகத்திற்கு உபயோகமுள்ளவர்களாகவும பொறுப்புணர்ச்சி, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றை உணர்ந்து செய்யக் கூடியவர்களாகவும் ஆக்குவதோடு சமயத்திற்குத் தொண்டாற்றி அவர்களை ஓர் இறைமையுள்ள பூரண மனிதர்களாக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும். இதில் சமூக சேவை என்பது ஓர் முக்கிய பங்காகும். சமூக சேவையானது அவர்களது தன்னம்பிக்கையை வளர்த்து சமூகத்தோடு ஒத்துழைக்கும் இயல்பையும் ஐக்கியத்தையும் கொடுக்கின்றது.

## சாரணர் சத்தியப்பிரமாணம்.




என்னால் கூடுமான வரையில்

* எனது சமயத்திற்கும் தேசத்திற்கும் என் கடமைகளைச் செய்யவும்
* எக்காலத்திலும் பிறர்க்கு உதவி புரியவும்
* சாரண விதிகளுக்கு அமைந்து பணிந்து நடக்கவும்

என் கௌரவத்தின் மீது சத்தியம் செய்கின்றேன்.

## சாரணர் விதிகள்



நம்பத் தகுந்தவன்

பற்றுறுதி உடையவன்

நேசமும் மரியாதையும் உடையவன்

மற்ற எந்தச் சாரணனுக்கும் சகோதரன்

தைரியம் உள்ளவன்

பிராணிகளின் தோழன்

ஒத்துழைப்பவன்

மனமகிழ்ச்சி உடையவன்

சிக்கனமானவன்.

சிந்தனை, சொல், செயலில் தூய்மையானவன்.

## சாரணர் கொள்கை.

சாரணர் கொள்கையான "தயாராயிரு" என்பதன் கருத்து எப்பொழுதும் மனத்தாலும் சரீரத்தாலும் உன்கடமையைச் செய்வதற்குத் தயாராயிருக்க வேண்டும் என்பதாகும். இத் "தயாராயிரு" என்பது இரு வகையாகப் பார்க்கப்படும். ஒன்று "மனத்தால் தயாராயிருப்பது" அதன் படி எவ்விதக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து நிறைவேற்ற உன்மனத்தால் தயாராயிருப்பது என்பதாகும். அத்துடன் பின்னால் ஏற்படக்கூடிய எவ்வித விபத்தையும் அல்லது கஷ்ட நிலைமையையும் பற்றி முன் கூட்டி ஆலோசித்து வைத்து தக்க தருணத்தில் செய்யத்தக்கதை செய்ய அறிவதுடன் அதனைச் செய்யவும் மனமுள்ளவனாக இருப்பதாகும். இரண்டாவதாக "சரீரத்தால் தயாராயிரு" என்றால் உன்னைப் பலசாலியாகவும் சுறுசுறுப்புள்ளவனாகவும் தக்கதருணத்தில் தக்க செயலைச் செய்வோனாகவும் நீர் பழகிக் கொண்டு, நீர் பழகிய விதமே அவற்றைச் செய்வதாகும்.

## சாரணச் சின்னம்.




சாரணச் சின்னமானது ஒரு படத்தின் அல்லது ஒரு திசையறி கருவியின் வடக்கு முனையைக் காட்டும் அம்புக்குறி போன்றுள்ளது. சரியான வழியிலும் மேல் நோக்கியபடியும் காட்டுவதாயிருந்தால் அதுவே முறையான சாரணச்சின்னமாகும். இதிலுள்ள மூன்று முனைகளும், சாரணச் சைகையில் உள்ள மூன்று விரல்களும் சாரணச்சத்தியப் பிரமாணத்தில் உள்ள மூன்று அம்சங்களையும் ஒரு சாரணனுக்கு ஞாபகப்படுத்துகின்றது. இரு நட்சத்திரத்தின் பத்து முனைகளும் பத்து விதிகளையும் சுட்டிக் காட்டுகின்றது. நடுவில் உள்ள நேர்முனைக் கோடு வடக்கை நோக்கி நிற்பதால் சாரணர் நேரே நின்று நல்லதைச் செய்தல் வேண்டும் எனக் கூறுகின்றது. இந்த அம்புமுனைச் சின்னம் உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் சாரணர்களின் சின்னமாக வந்து விட்டது. ஒரு தேசிய சின்னத்தை பிரிதொன்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் முகமாகவே அந்தேசத்தின் சின்னம் அதன் முன்புறம் வைக்கப்பட்டிருக்கும்.

அம்பு முனைச் சின்னத்தின் கீழ் "தயாராயிரு" என்றும் மகுட வாக்கியத்துடன் ஒரு சுருள் இருக்கின்றது. இந்தச் சுருள் முடிவுகள் ஒரு சாரணனின் வாய் போல் அமைந்துள்ளன. இது அவன் புன்னகையுடனும் முழு விருப்புடனும் செய்கின்றான் என்பதைக் குறிக்கின்றது. இந்தச் சுருளின் கீழ் முடிச்சுள்ள ஒரு கயிறு இருக்கின்றது. தினமும் யாருக்காவது ஒரு நல்லுதவி புரிதல் வேண்டும்என்பதை அம்முடிச்சு உனக்கு ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பதற்காகவே ஆக்கப்பட்டுள்ளது.

## சாரணர் நிகழ்ச்சித் திட்டம்.

தற்பொழுது இலங்கைச் சாரணர் சங்கம் பிரித்தானியாவில் 25 வருடங்களுக்கு முன்னர் பின்பற்றி வந்த முறைமையை பின்பற்றுகின்றது. தற்பொழுது இலங்கையிலுள்ள சாரணர் சிறுவர்களின் தேவைகளுக்கு ஏற்றவகையில் இச்சேவை பற்றிய நிகழ்ச்சிகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

பேடன்பவல் பிரபு 75 வருடங்களுக்கு முன்னர் நவீன பிரித்தானிய கல்வி முறைமையைய பின்பற்றியும், நவீன முறைகளைப் பயன்படுத்தியும் தனித்துவமான இளைஞர் இயக்கத்தை உலகிற்குத் தந்துள்ளார். பல்வேறு இளைஞர் இயக்கங்கள் காலத்தின் தேவைக்கு ஏற்ப தமது நிகழ்ச்சிகளைத் திருத்தி அமைத்துள்ளனர். அதே போன்று சாரணர் நிகழ்ச்சியும் நவீன சிறார்களுக்கு ஏற்றதாகவும், கவர்ச்சிகரமானதாகவும், சவால்கள் நிறைந்துள்ளனவாகவும் அமைகின்ற முறையில் மீள் அமைக்கப்பட்டுள்ளது.

மிகவும் வெற்றிகரமாகத் தொழிற்படும் இக்குழு முறையானது சிறார்கள் அணி முறைமையின் ஊடாகவும், சாரணத் தலைவரின் வழிகாட்டலின் கீழும் இந்த நிகழ்ச்சியானது நடாத்தப்படுகின்றது. சாரணர் தலைவர் ஏறத்தாழ வழிகாட்டியாகவும், தத்துவபோதகராகவும், நண்பராகவும் விளங்குகின்றார். அவர் இந்த அநுபவங்களின் அடிப்படையில் அணிமுறையில் விசேட கவனம் எடுத்தல் வேண்டும். இந்த நிகழ்ச்சியில் சிரேஸ்ட சாரணப் பிரிவும் சேர்க்கப்பட்டுள்ளது. எனினும் பெரும்பாலான குழுக்களில் அது தொழிற்படுவதில்லை, உண்மையில் தாமாகவே ஜனாதிபதி விருதுக்கு தம்மைத் தயார்படுத்திக் கொள்ளும் மிகக் குறைந்த அளவு சிரேஸ்ட சாரணர்கள் குழுவில் தொடர்ந்து இருப்பர். இந்த புதிய நிகழ்ச்சியின் ஒரு நோக்கம் இந்த இடைவெளியையும் நிரப்புவதாகும்.

சாரணர் நிகழ்ச்சித் திட்டத்தில் கணிசமான அளவில் சிதைந்துள்ள திரிசாரணர் பிரிவானது இந்நிகழ்ச்சியின் ஊடாக வளர்ச்சி பெறவழியுள்ளது. இந்த நிகழ்ச்சியில் சிரேஸ்ட சாரணர், திரி சாரணர்களைப் பங்கு கொள்ள வைப்பதுடன் அவர்களை சேர்ப்பாடு நிறைந்த மனப்பாங்கு உடையவர்களாக ஆக்குவதற்கும் பாடுபடுகின்றது.

சமூகத்துடன் மிக நெருங்கிய சிறந்த தொடர்பினை வைத்துக் கொள்வதற்கு சிறார் நிகழ்ச்சியைத் திருத்தி அமைக்க வேண்டி உள்ளது. அப்படிச் செய்வதற்கு சமூகப் பண்பாடு, ஆன்மீக சௌக்கிய பயிற்சிக்கு அழுத்தங் கொடுத்து சிறாரைப் புதிய அறிவு மனோபாவம் புதிய கண்ணோட்ட திறன்களுக்கு இட்டுச் செல்லல் வேண்டும். இத்தகைய அம்சங்களையே புதிய நிகழ்ச்சித் திட்டம் தன்னகத்தே கொண்டுள்ளது.

## புதிய சாரணர் நிகழ்ச்சித் திட்டம்.

### குறிக்கோள்

புதிய சாரணர் நிகழ்ச்சித் திட்டம் சிறாருக்கும், இளையோருக்கும் ஆர்வமூட்டும் மனக் கிளர்வையும் மனமகிழ்ச்சியையும் தரும் திட்டமாகும்.

| | |
|---|---|
| அபிவிருத்தி | ஆரோக்கியத்தை வளர்க்கும் பழக்கவழக்கங்களை வளர்க்கும். |
| குறிக்கோள் : | சாரணர் திறமையான கைத்திறனை அடைதலும் அதில் பரந்து பட்ட அறிவைப் பெறுதலும். |
| வளர்த்து எடுத்தல்: | தன்னம்பிக்கையை வளர்த்து எடுத்தல். |
| ஒழுங்கமைத்தல் : | செயற்திட்டங்களினுள்ளேயும், வெளிககளங்களிலும் துணிவு சேர் செயற்பாடுகளைச் செய்தல் |
| நயத்தல் | நாட்டின் பண்பாட்டையும் அண்மைக்கால அபிவிருத்திகளையும் எடுத்துரைத்தல். |
| சேவை செய்தல் : | ஒழுங்கு நெறிப்பட்டதும் முன்னுதாரணமாக அமைவதுமான வாழ்க்கையை நடாத்தி, சமூகத்திற்குப் பயனுள்ள சேவையைச் செய்தல். |

## சாரண இயக்கப் பிரிவுகள்.

| பிரிவு | வயதெல்லை | மகுட வாக்கியம் | நிறம். |
|---|---|---|---|
| குருளைச் சாரணர் | 7 - 11 | இயன்ற வரை திறமையாகச் செய் | மஞ்சள் |
| சாரணர்கள் | 11 - 18 | தயாராயிரு | பச்சை |
| திரி சாரணர் | 17 - 24 | சேவை செய்வோம் | சிகப்பு |

## பாடத்திட்டம்

கீழ்க்காணப்படும் சின்னங்களையும், விருதுகளையும் தமது இலக்கினை அடையச் சாரணர் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

அலகு 1. அங்கத்துவச் சின்னம்.
2. சாரண விருது.
3. மாவட்ட ஆணையாளர் கட்டிழை.
4. வினைத்திறன் அலங்காரம்.
5. பிரதம ஆணையாளர் விருது.
6. ஜனாதிபதி விருது.

## பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்படும் பிரிவுகள்

ஒவ்வொரு அலகுத் திட்டத்திலும் 6 பிரிவுகளாக செயற்பாடு பிரிக்கப்பட்டிருக்கும்.

1. கடப்பாடுகள்.
2. பண்பாடு.
3. சாரணர் கைத்திறன்.
4. சௌக்கியம்.
5. சமூகம்.
6. துணிவு சேர் செயல்கள்

## சாரணர் குழு

சாரணர் குழுவானது பின்வரும் பிரிவுகளில் ஒன்றை உள்ளடக்கியிருக்கும்.

1. குருளைச் சாரணர் பிரிவு (Cub Scout Unit)
2. சாரணர் பிரிவு (Scout unit)
3. திரி சாரணர் பிரிவு (Rover Scout unit)

ஒரு குழுவில் ஒன்றுக்கு மேற்பட்ட சாரணர் பிரிவுகள் இருக்கலாம். (உ+ம்) குருளைச் சாரணர், சாரணர், திரி சாரணர். ஆனால் ஒவ்வொரு பிரிவிற்கும், அப்பிரிவின் கீழ் ஒரு சாரணத் தலைவரும் அவரின் கீழ் உதவிச் சாரணத்தலைவரும் இருக்க வேண்டும் இவர்களே பிரிவில் உள்ள சாரணர்களுக்கு தரமானதும் முறையான பயிற்சிகளை வழங்குவதுடன், தமது பிரிவினைத் திறமையான முறையில் நிர்வகிப்பதும் இவர்களது கடமையாகும்.

குழுச் சாரணத் தலைவராக உள்ளவர் தனது குழுவின் சகல பிரிவுகளையும் நிர்வகித்து நடத்துபவராகக் காணப்படுவார்.

## சாரணர் பிரிவு.

11 - 18 வயது வரையிலான மாணவர்கள் சாரணர் பிரிவில் அடங்குவார்கள். சிரேஸ்ட சாரணர் என்ற விசேட பிரிவு ஒன்று இப்போது இல்லை. சாரணர் பிரிவு அணிகளுக்கு விசேடமான வாய்ப்புக்களை வழங்குகின்றதோடு, அதன் மூலம் அவர்கள் சரியான முறையில் செயற்படுவதற்கும் பொறுப்பு வாய்ந்த தன்மையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உதவுகின்றது.

கூடுதலான அணிகளைக் கொண்ட சாரணர் பிரிவு கூடுதலான துருப்புக்களை உருவாக்கலாம் அல்லது வேறு ஒரு துருப்பை பெரிய மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொள்ளலாம்.

## நேர்காணல்.

சாரணர்களைப் பொறுத்த வரையில் எல்லா விதமான சாரணர் விருதுகளையும் பெறுவதற்காகவும் நேர்காணலுக்குச் செல்லல் வேண்டும். இந்த நேர்க்காணலின் முக்கிய நோக்கம் தனியே விருதுகளையோ சின்னங்களையோ மட்டும் பெறுதல் அன்றி, அவர்களின் பிற்கால வாழ்க்கையில் நேர்முகப் பரீட்சைகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய தன்னம்பிக்கையைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும் மேற்கொள்ளப்படுகின்றது.

நேர்காணலை மேற்கொள்ளும் பரிசோதகர் பரீட்சைக்கு வருகை தரும் சாரணா எதிர்பார்க்கப்படும் தரத்தினை அடைந்துள்ளாரா என்பதைப் பரீட்சித்து தன்னளவில் திருப்தி அடைவது மாத்திரமின்றி அவர்களை மேலும் ஊக்கமும், உற்சாகப்படுத்துவதோடு அவர்களுககாக விருதுகளைப் பெற சிபாரிசு செய்வதோடு தேர்ச்சி அறிக்கையில் கையொப்பம் இடலும் வேண்டும்.

சாரணர் நேர்காணல் காண்பவரைக் காணச் செல்லும் போது தனது அணித்தலைவரினால் பதிவு செய்யப்பட்ட தேர்ச்சி அறிக்கையுடனும் தினக் குறிப்பேட்டுடனும் செல்லல் வேண்டும்.

## வேறுபட்ட விருதுகளுக்கான நேர்காணல்கள் கீழ் வருமாறு.

| சின்னங்கள்/விருதுகள். | நேர்காணபவர். |
|---|---|
| இணைப்புச் சின்னம், இணைப்பு விருது அங்கதத்துவச் சின்னம். | பிரிவுச் சாரணத்தலைவர். |
| மாற்றீட்டு சாரணர் விருது. | பிரிவுச் சாரணத்தலைவர். |
| சாரண விருது. | குழுச் சாரணத்தலைவர். |
| மாவட்ட ஆணையாளர் கட்டிமை. | உதவி மாவட்ட ஆணையாளர், அலலதுமாவட்ட ஆணையாளரால நியமிக்கப்பட்ட உதவி மாவட்ட ஆணையாளர். |
| வினைத்திறன் அலங்காரம் | உதவி மாவட்ட ஆணையாளர். (பயிற்சி) அல்லது மாவட்ட ஆணையாளர், நியமிக்கப்பட்ட மாவட்டத்திலுள்ள மிகவும் மூத்த. சாரணத்தலைவர் நியமிக்கப்படல். |
| பிரதம ஆணையாளர் விருது | உதவி மாவட்ட ஆணையாளர், (பயிற்சி) அல்லது மாவட்ட ஆணையாளரால் நியமிக்கப்பட்ட உதவி மாவட்ட ஆணையாளர். |
| ஜனாதிபதி விருது | மாவட்ட ஆணையாளர். |

## ஒழுக்க அறப் பண்பாட்டுப் பயிற்சி.

சாரணர்களுக்கு ஒழுக்க அறப் பண்பாட்டுப் பயிற்சியில் மிகவும் முக்கியமான ஒரு இடம் கொடுக்கப்படல் வேண்டும். ஏனெனில் ஒரு மாணவனை சிறந்த சாரணணாக்க ஒழுக்க அறப் பண்பாட்டு செயல்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அத்தோடு அவர்கள் கணிசமான அளவு எடுத்துக் கொள்ளக் கூடிய பொறுப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும், வழி செய்தல் வேண்டும். பல்வகைப்பட்ட சாரணர் விருதுகளில் பண்பாட்டுச் சௌக்கிய நடவடிக்கைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## பிரத்தியேக தினக்குறிப்பேடு.

சாரணனின் பிரத்தியேக தினக்குறிப்பேடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பதிவேடாகும். இதனை மிகவும் கவனமாகப் பாதுகாத்தலுடன், சாரண விருதுக்குத் தேவையான சகல தகைமைகளையும் முடித்த பின்னர், இதனை சாரண விருதுகளைப் பெற முன்வைத்தல் வேண்டும். மேலும் இந்தத் தினக்குறிப்பேடானது ஜனாதிபதி சாரணர் விருதினைப் பெறும் போதும், மாவட்ட ஆணையாளரின் முன்னிலையிலான நேர்க்காணலின் போதும் அவருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

## மாற்றீட்டுச் சாரண விருது.

இந்த விருது அறிமுகப்படுத்தப்பட்டது ஏனெனில் சாரண இயக்கத்தில் காலதாமதமாகச் சேர்ந்த மாணவர்கள் மாவட்ட ஆணையாளர் கட்டிழையைப் பெறுவதற்காக ஆகும். மாற்றீட்டு சாரணர் விருது வழங்கப்படும் முன்னர் அங்கத்துவச் சின்னம் பெற்றிருத்தல் வேண்டும்.

இந்த விருதுக்கான பாடத்திட்டமானது சாரண விருதில் உள்ள கடப்பாடு, சாரணர் கைத்திறன், துணிவு சேர் செயல்கள் என்பவற்றை உள்ளடக்கும்.

# அங்கத்துவச் சின்னம்

# MEMBERSHIP BADGE

# அங்கத்துவச் சின்னம்.

(11 வயதுக்கு மேற்பட்டவர்கள்.)

## 1. கடப்பாடுகள். (Commitment)

1.1. சாரணர் சத்தியப் பிரமாணமும் விதிகளும்.
1.2. சாரணச் சைகைகளும் வணக்கமும் வணக்கம் செலுத்தும் வேளைகளும்.
1.3. சாரணத் தந்தை பேடன் பவலின் வரலாறும் உலக சாரண இயக்கத்தின் வளர்ச்சியும்.
1.4. இலங்கையில் சாரண இயக்கத்தின் வளர்ச்சி.
1.5. பிரத்தியேகத் தினக்குறிப்பேடும் அதைப் பேணலும்.
1.6. உலக சாரணீய இயக்கத்தில் அங்கத்துவம் வகிப்பது பற்றியும் அங்கத்துவம் பெற வருடாவருடம் கொடுப்பனவு செய்தல் பற்றித் தெரிந்திருத்தல் வேண்டும்.
1.7. சேமிப்பு.

## 2. பண்பாடு (Culture)

2.1. தேசியக் கொடி
2.2. தேசிய கீதம்.

## 3. சாரணர் கைத்திறன். (Scout craft)

3.1. கட்டுக்கள்.
3.2. குலைவுத் தடை வரிச்சு.
3.3. அணிச் செயற்பாடுகள்.

## 4. சௌக்கியம் (Health)

4.1. ஆள்நிலையில் சௌக்கியம் தரும் பழக்கவழக்கங்கள்.
4.2. காயத்தைச் சுத்தம் செய்தலும், மருந்து கட்டலும்.
4.3. தேக நிலை
4.4. கட்டளைகள்.
4.5. ஊதுகுழல் சமிக்கைகளும் கைச் சமிக்கைகளும்
4.6. சமூக சுகநலப் பழக்க வழக்கங்கள்.

## 5. சமூகம். (Society)

5.1. தன்னைச் சுற்றியுள்ள பரந்து பட்ட சூழலைப் பற்றிய ஆராய்வு.

## 6. துணிவு சேர்செயல்கள் (Adventure)

6.1. வெளிக்கள முயற்சி

## 7. கலைச் சின்னங்கள். (Proficiency Badges)

தேவையில்லை.

## 8. சேவைக் காலம். (Service)

8.1. இரண்டு மாதச் சேவை.

## 9. தகைமை. (Eligibility)

9.1. சாரணச் சின்னம் சூட்டப் பெறும் மாணவன் மேற்கூறிய தகைமைகள் அனைத்தையும் பூர்த்தி செய்திருத்தலுடன் ஆகக் குறைந்தது 11 வயதும் இரண்டு மாதமுமாக இருத்தல் வேண்டும்.

9.2. குருளைச் சாரணாக இருந்து இணைப்பு விருது அல்லது இணைப்புச் சின்னம் பெற்ற ஒருவர் 11 வயதினிலே சாரணனாகச் சின்னம் சூட்டப் படுவார்.

# (1) கடப்பாடுகள்

சாரணர் சத்தியப் பிரமாணத்தையும் விதிகளையும் அறிந்து கொள்வதுடன் அவற்றை விளங்கி ஏற்றுக் கொள்ளுதல்.

## 1.1 சாரணர் சத்தியப்பிரமாணம்

" என்னாற் கூடுமான வரையில் எனது சமயத்திற்கும், தேசத்திற்கும் என் கடமைகளைச் செய்யவும் எக்காலத்தும் பிறர்க்கு உதவி புரியவும் சாரணர் விதிகளுக்கு அமைந்து பணிந்து நடக்கவும் என் கௌரவத்தின் மீது நான் சத்தியம் செய்கின்றேன். "

குறிப்பு :-

இப் பிரமாணப்படி அமைந்து நடப்பது மிகச் சிரமமாகும். ஆனால் அத்தியாவசியமானதாகும். இதன்படி நடக்காதவன் ஒரு சாரணனாக இருக்க முடியாது. சாரணீயம் ஓர் விளையாட்டு மட்டுமின்றி உங்களிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கப்படுகின்றது என்பதை ஒவ்வொரு சாரணனும் மனதில் நினைக்க வேண்டும்.

## சாரணர் விதிகள்.

1. சாரணன் நம்பத் தகுந்தவன்.
2. சாரணன் பற்றுருதி உடையவன்.
3. சாரணன் நேசமும் மரியாதையும் உடையவன்.
4. சாரணன் மற்றெந்தச் சாரணனுக்கும் சகோதரன்.
5. சாரணன் தைரியம் உள்ளவன.
6. சாரணன் பிராணிகளின் தோழன.
7. சாரணன் ஒத்துழைப்பவன்.
8. சாரணன் மனமகிழ்ச்சி உடையவன்.
9. சாரணன் சிக்கனமானவன்.
10. சாரணன் சிந்தனை, சொல், செயலில் தூய்மையானவன்.

ஞாபகக் குறிப்பு :- ந ப நே ச தை தோ ஒ ம சி தூ

### 01. சாரணன் நம்பத் தகுந்தவன்.

ஒரு சாரணன் "என் கௌரவத்தின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன்" என்பது மிகவும் பரிசுத்தமான உறுதி மொழியாகும். ஒரு சாரணனுக்கு ஓர் கட்டளையிட்டால் அதன் சிரமங்களைத் தாண்டி தன் திறமைக்கேற்பச் செய்து முடிக்கக் கடமையுடையவன். இப்படிச் செய்யத் தவறின் சாரணன் தன் மீது வைக்கப்பட்ட நம்பிக்கையை முறியடித்ததாகக் கருதி சாரணர் சின்னத்தை திருப்பிக் கொடுக்கும் படி பணிக்கப்படுவான்.

### 02. சாரணன் பற்றுருதி உடையவன்.

சகலரிடமும் நெருங்கிய தொடர்புடையவனாகவும், பிறர் நன்மை, தீமைகளில் அக்கறை உடையவனாகவும் எவரையும் ஆபத்திலிருந்து காப்பாற்றக் கூடியவனாகவும் இருக்க வேண்டும்.

### 03. சாரணன் நேசமும் மரியாதையும் உடையவன்.

சாரணனது ஒவ்வொரு நடத்தையிலும் அன்புடன் கூடிய மரியாதை இருக்க வேண்டும். குறிப்பாக முதியோரிடமும் அங்கவீனர்களுடனும் நோயாளர்களோடும் பெண்களுடனும் மரியாதையாகவும் அவர்களுக்கு உதவி புரிபவனாகவும் இருக்க வேண்டும்.

## 04. சாரணன் மற்றெந்தச் சாரணனுக்கும் சகோதரன்.

சாரணன் எல்லோர்க்கும் தோழன். சமுதாயத்தில் எந்தத் தரத்தில் இருக்கும் ஓர் சாரணனுக்கும் சாரணன் சகோதரன் ஆவான். இவன் முன்பின் தெரியாத அன்னிய சாரணனைச் சந்திப்பினும் சகோதர தோழமையுணர்ச்சியுடன் பழகுதல் வேண்டும். அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்தல் வேண்டும்.

## 05. சாரணன் தைரியம் உள்ளவன்.

சாரணன் எக்கஷ்டத்தையும் தாங்கி மற்றவர்களை ஆபத்திலிருந்து அல்லது துன்பத்திலிருந்து காப்பாற்றும் தைரியமுள்ளவன். அநீதிகளை எதிர்த்துக் குரல் எழுப்பும் தைரியமுள்ளவன்.ஆபத்தான வேலைகளிலும் தைரியமாக ஈடுபடுபவன்.

## 06. சாரணன் பிராணிகளின் தோழன்.

பிராணிகள்யாவும் இறைவனின் படைப்புக்கள். அவற்றினை அநாவசியமாகக் கொல்லுவதோ வதைப்பதோ பாவச் செயலாகும். இயலுமானவரை அவைகளுக்கு நேரும் துன்பங்களை நீக்க முயல வேண்டும். பொழுது போக்காகவும் பிராணிகளை வளர்க்கலாம்.

## 07. சாரணன் ஒத்துழைப்பவன்.

தாம் விரும்பாவிட்டாலும் தமக்கு இடப்பட்ட கட்டளையைச் செவ்வனே நிறைவேற்றித் தனது கடமைகளைச் செய்த பின் தன் ஆட்சேபனைகளைத் தெரிவிக்க வேண்டும். எந்த நல்ல வேலையை யார் செய்தாலும் தன்னால் இயன்றவரை ஒத்துழைக்க வேண்டும். எவ்வித கட்டளைகளையும் இன்முகத்துடன் வரவேற்று நிறைவேற்ற வேண்டும்.

## 08. சாரணன் மனமகிழ்ச்சியுடையவன்.

சாரணன் சந்தோஷமானவன். சகல கலைகளையும் இயற்கையையும் இரசித்து மகிழ்ச்சி அடையக் கூடியவன். சிறந்த பொழுதுபோக்குகளினூடாகத் தன்னையும் பிறரையும் மகிழ்விக்ககூடியவன். நகைச்சுவை உணர்வுடையவன்.

## 09. சாரணன் சிக்கனமானவன்.

சாரணன் எவ்வேலைகளிலும் தனக்கு இலகுவாகக் கிடைக்கக்கூடிய பொருட்களிலிருந்தும் பிறர் உபயோகிக்காத பொருட்களிலிருந்தும் செய்து முடிக்கக்கூடியவனாக இருக்க வேண்டும். தன்னால் இயன்ற வரை சிறு தொகையாவது பணம் சேர்க்கும் பழக்கம் கொண்டிருக்க வேண்டும். தேவைப்படும் போது தனக்கோ அல்லது பிறருக்கோ அதைப் பயன்படுத்தலாம்.

## 10. சாரணன் சிந்தனை, சொல், செயல்களில் தூய்மையானவனாக இருப்பான்.

சாரணன் தீயதெதையும் மனதில் நினைக்காமல் நல்லதை நினைத்து நல்லதைப் பேசி, நல்லதையே செய்வான். சாரணன் சுத்தமானவனாகவும் தன்னைத் தானே கட்டுப்படுத்தும் வல்லமையும் உடையவன்.

## 1.2 சாரணச் சைகை.

**சைகைளின் அர்த்தத்தினை விளங்கிக் கொண்டு அவை எச்சந்தர்ப்பத்தில் பயன்படுத்தல் வேண்டும் என்பது பற்றித் தெரிந்து கொள்ளல்.**



வலது கையைத் தோள் மட்டத்திற்கு உயர்த்தி உள்ளங் கையை வெளிப்புறம் திருப்பி பெருவிரலால் சுண்டு விரலின் நகத்தை அழுக்கி மற்றைய மூன்று விரல்களையும் நேராக மேலே உயர்த்தி நீட்டி வைத்தல் ஆகும். மூன்று விரல்களும் சாரணர் சத்தியப்பிரமாணத்திலுள்ள உள்ள மூன்று அம்சங்களை ஞாபகப்படுத்தும்.

## சாரணர் வணக்கச் சைகை.

கீழே கூறப்பட்டவாறு உயர்த்தப்பட்டகையை முன் நெற்றியில் முட்டும் படி உயர்த்திப் பின் உடம்புடன் உரோஞ்சும் படி கையைக் கீழே விடுவது சாரணர் வணக்கமாகும். இது வேகமாகச் செய்யப்படல் வேண்டும்.





## இடக்கைக் குலுக்கல்.



ஆதிகால யுத்தங்களில் எதிரிகளைத் தாக்குவதற்கு ஈட்டிகளைப் பாவித்து, கேடயங்களால் தங்களைப் பாதுகாத்துக் கொள்வர். ஓர் யுத்த வீரன் கேடயத்தை கீழே போட்டுத் தனது இடது கையை நீட்டிக் கொடுத்தால் தான் மற்றவனை நம்புகிறேன் என்று அர்த்தம்.

இதயத்தின் பெரும் பகுதி இடப்பாகத்தில் இருப்பதால் நான் எனது இதயத்தாலும் உன்னை நேசிக்கிறேன் என்பதாகும்.

## வணக்கம் செலுத்தும் வேளைகள்

01. சாரணப் பதக்கம் அணிந்த எல்லோரும் சந்திக்கும் வேளையில் வணக்கம் செலுத்திக் கொள்வர்.

02. சாரணத்தலைவரைச் சாரணர் சந்திக்கும் வேளையில் மரியாதை செய்யும் நிமித்தம் வணக்கம் செய்தல் வேண்டும்.

03. தேசியக் கொடி உயர்த்தப்படும் போதும் தேசிய கீதம் பாடப்படும் போதும் சாரணர் கொடிகள் அலங்காரமாகக் கொண்டு செல்லும் போதும் பிரேத ஊர்வலம் வரும் போதும் மரியாதையின் நிமிர்த்தம் எப்போதும் வணக்கம் செலுத்துவர்.

குறிப்பு :-இக்காலங்களில் சாரணத்தலைவர்களின் கட்டளைகளுக்கமைய நடப்பதாக இருந்தால் பொறுப்பாளரின் கட்டளைக்கமைய வணக்கம் செலுத்துவர் அல்லது கவனமாக நிற்பர். ஏனைய சந்தர்ப்பங்களில் சுயேட்சையாக வணக்கம் செலுத்துவர்.

04. சாரணன் கோலை வைத்திருக்காத சந்தர்ப்பத்தில் வலக்கையால் வணக்கம் செலுத்தல் வேண்டும். சாரணர் கோலுடன் செல்லும் போது இடக்கையை இடுப்பு மட்டத்திற்குத் தூக்கிக் கோலின் மேல் வைத்து சாரணர் சமிக்கையைக் காட்டி வணக்கம் செலுத்துதல் வேண்டும்.

05. சாரணர் உடையுடன் இருக்கும் போது தொப்பி அணிந்திருந்தாலும் சரி, அணிந்திருக்கா விட்டாலும் சரி வணக்கம் செலுத்துதல் வேண்டும். ஆனால் சமய வழிபாட்டு நேரத்தில் மட்டும் வணக்கம் செலுத்துவதற்குப் பதிலாக கவனமாக எழுந்து நிற்றல் வேண்டும்.

## 1.3 சாரணத்தந்தை பேடன்பவலின் வரலாறு.

1857 பெப்ரவரி 22 இல் இங்கிலாந்தில் உள்ள இலண்டன் நகரில் பிறந்தார்.

| | | |
|---|---|---|
| முழுப் பெயர் | : | ரொபேட் ஸ்டீவின்சன் ஸ்மித் பேடன் பவல் (Robert Steprem Smith Badan Pawal) |
| தந்தையார் பெயர் | | ரொபேட் கிறேஸ் பேடன் பவல். |
| தாயார் பெயர் | : | ஹென்றியேற்றா கிறேஸ் ஸ்மித். |
| குடும்பத்தில் உள்ளோர் | : | ஏழு சகோதரரை உள்ளடக்கிய குடும்பத்தில் இவர் கடைசிப் பிள்ளையாகக் காணப்பட்டமையினால் அதிக செல்லத்தின் காரணமாக படிப்பில் ஆர்வம் அற்றவராக இருந்தார். |
| 1876 இல் | : | தனது 19 ஆவது வயதில் இராணுவத்தில் சப் லெப்டினனாக இணைந்து கொண்டார். |
| 1883 இல் | : | தனது 26 வது வயதிலேயே தளபதிப் (கப்டன்) பதவிக்கு உயர்த்தப்பட்டார். |
| 1887 இல் | : | சூலு சாதியினருடன் பெரும் யுத்தங்களை நடாத்தினார். |
| 1899 இல் | : | இவர் உபதளகர்த்தா (கேணல்) பதவிக்கு உயர்த்தப்பட்டார். "மேப்கிங் நகர" முற்றுகையைச் சிறுவர் உதவியுடன் முறியடித்தார். |

| | | |
|---|---|---|
| 1901 இல் | : | வெற்றி வீரராகத் தாய்நாடு திரும்பினார். |
| 1907 இல் | : | 20 சிறுவர்களுடன் பிரவுன்ஸீத் தீவில் இளைஞர் சாரணீயத்தை ஆரம்பித்தார். |
| 1908 இல் | : | "இளைஞர் சாரணீயம்" என்ற சாரணீயக் கைந்நூலை வெளியிட்டார். |
| 1910 இல் | : | இராணுவத்தில் இருந்து விலகினார். |
| 1920 இல் | : | உலகப் பிரதம சாரணராக பேடன் பவல் அறிமுகப் படுத்தப்பட்டார். |
| 1928 இல் | : | "இன்வெஸ்டன் பேடன் பவல்" என்னும் விருதைப் பெற்றார் |
| 1937 இல் | | மனைவியுடன் ஆபிரிக்காவிற்குப் பயணமானார். |

1941 ஜனவரி 8 ஆம் திகதி ஆபிரிக்காவிலுள்ள கென்யா நாட்டில் தமது இல்லத்தில் காலமானார்.

## ஸ்தாபகர் கில்வேல் பேடன்பவலின் வாழ்க்கைச் சுருக்கம்

பிரபுவின் சிறுவயதில் அவரது பசுமையான சந்தோசமான வாழ்க்கை அநுபவங்களில் இருந்து தொகுத்து ஆரம்பிக்கப்பட்ட இயக்கமே சாரணர் இயக்கமாகும். இவரது சிறு வயது மிகவும் சந்தோஷமான காலமாகும். இவர் சிறு வயதில் வள்ளங்களில் சுற்றித் திரிதல், வனங்களுக்குச் சென்று முயல் வேட்டையாடல், பறவைகளை அவதானித்து இரசிப்பது, மிருகங்களின் அடிச்சுவடைப் பின்தொடர்தல் போன்ற சந்தோசமான வேலைகளில் ஈடுபடும் போது இதே சந்தோசமான அநுபவங்களைத் தாய்நாட்டு இளைஞர்கள் ஏன் அநுபவிக்கக்கூடாது என்று யோசித்து ஆரம்பித்த இயக்கமே "சாரணர் இயக்கமாகும்" போர்க்காலங்களில் சாரணனின் பணி எதிரிகளின் படை எங்கு நிற்கின்றது என்பதைப் போர்க்களத்திற்குச் சென்று துணிவுடன் அறிந்து வந்து தம் நாட்டுப் படைகளுக்கு அறிவிப்பதே ஆகும். பின்பு இது படிப்படியாக தேசத்திற்கும் சமயத்திற்கும் பணிபுரியும் ஒரு புனித சமாதான இயக்கமாக மாறியது.

இவர் லண்டனில் கல்வி கற்றார். கல்வியில் சிறந்து விளங்காவிடினும் பிறகலைகளில் ஆர்வமாகவும் மிகவும் உற்சாகத்துடனும் பங்கு பற்றினார். இவர் சிறந்த உதை பந்தாட்ட வீரர் நடிப்புத் திறன் மிகுந்தவர். சங்கீதத்தில் மிகவும் விருப்புக் கொண்டவர். இராணுவத்திலும் சிறந்து விளங்கினார். இவர் ஒரு சாதியினருக்கு இடையான யுத்தத்தில் திறமையாகப் போர் புரிந்து பெரும் புகழ் ஈட்டியதுடன் " துயில் கொள்ளாத ஓநாய் " எனவும் பிற்காலத்தில் அழைக்கப்பட்டார். அவர் பல போர்களில் பங்கு பற்றி வெற்றி பெற்றதன் விளைவாக மிக உயர் விருதுகளையும் பட்டங்களையும் பெற்று பதவி உயர்வுகளைப் பெற்றார்.

## உலக சாரணர் சபை

சாரணியம் 1907 இல் இங்கிலாந்தில் ஆரம்பமாகி மற்றைய நாடுகளுக்குப் பரவியது. இதன் பயனாக 1920 இல் உலக சாரணர் சபை உருவானது. இதன் அலுவலகமாக உலக சாரண பணிமனை ஜெனிவாவில் ஸ்தாபிக்கப்பட்டது. மூன்று வருடங்களுக்கு ஒரு முறை கூடி 12 அங்கத்தினர்களைத் தெரிவு செய்யும். அவர்கள் அந்த மூன்று வருடத்திற்குமான உலக சாரணீயத்தை நிர்வகிக்கும் பொறுப்பாளிகள் ஆவார்கள். பேடன்பவல் இறந்த பின் இந்தச் சபை சாரணீயத்தை வளர்க்கும் பெரும் பொறுப்பை ஏற்றதன் மூலம் சாரணீயத்தை மேலும் வளர்த்தது.

உலக சாரணீயச் சபையுடன் ஒரு தேசியச் சாரணர் சங்கம் இணைவதற்கு பின்வரும் அடிபபடைத் தத்துவங்களை ஏற்று நடக்க வேண்டும்.

கடவுள், சமயத்திற்கான கடமை.
நாட்டுப் பற்று.
உலக சகோதரத்துவம்.
பிறருக்கு உதவி.
விதியும் வாக்குறுதியும்.
இஷ்டபூர்வமான அங்கத்துவம்.
அரசியல் பற்றின்மை.
வெளிப்புற வாழ்க்கை.

1933 ஆம் ஆண்டு உலக சாரணீய சபை நிர்வாகத்தினை இலகுவாக்கும் பொருட்டு உலக சாரணீய நிர்வாகம் ஐந்து பிரிவுகளாகப் பிரிந்தது.

## உலக சாரணியம்.

144 அங்கத்துவ நாடுகள்.

உலக சாரணீயத்தின் பொதுச் சபை — உலக சாரணா சபை — 12 பேர் இடையிட்டு 6 வருட காலத்துக்குத் தேர்ந்தெடுக் கப்படுவர்.

உலக சாரணர் குழு — உலக சாரணீயத்தின் இயக்குனர் குழு

உலக சாரணர் பணிமனை

செயற்படுதல்
தொடர்பு
இணைப்பு
பதவி உயர்வு

| ஆபிரிக்கா | அரேபியா | ஆசியா பசுபிக் | ஐரோப்பா | இடைஅமேரிக்கா |
|---|---|---|---|---|

| தகவல் | பயிற்சி | ஜம்போறி | பணிப்பு | உதவி | வருகை | வெளியீடு | ஆலோசனை | ஆராய்வு |
|---|---|---|---|---|---|---|---|---|

144 அங்கத்துவ நாடுகள்.

## உலக சாரண இயக்கத்தின் வளர்ச்சி

1907 இல் இங்கிலாந்தில் உள்ள பிரவுன்ஸீத் தீவில் சாரணீய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு முதலாவது பரீட்சார்த்த பாசறை 20 சிறுவர்களுடன் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

1908 இல் "இளைஞர் சாரணீயம்" என்ற நூல் வெளியிடப்பட்டது.

1909 இல் முதலாவது சாரண விழா பளிங்கு மாளிகையில் நடைபெற்றது.

1910 இல் கடற் சாரணீயம், பெண்கள் சாரணீயம் ஆரம்பிக்கப்பட்டது.

1916 இல் குருளைச் சாரணர் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

1918 இல் திரி சாரணர் பிரிவு ஆரம்பமாகியது.

1919 இல் கில் வெல் பூங்கா திறக்கப்பட்டது.

1920 இல் முதலாவது உலக ஜம்போறி சிறப்பாக நடைபெற்றது.

1925 இல் வலது குறைந்தோருக்கான சாரணீயம் ஆரம்பம்.

1931 இல் முதலாவது உலக திரி சாரணர் சம்மேளனம் கூடியது.

1941 இல் ஸ்தாபகர் இறப்பு. விமான சாரணீயம் ஆரம்பம்.

1952 இல் முதன் முதலாக உலக சாரணத் தலைவர்கள் கில்வெல்லில் சந்தித்தார்கள்.

1957 இல் உலக சாரண இயக்கப் பொன்விழா இங்கிலாந்தில் நடைபெற்றது.

இன்று உலகில் 217 நாடுகளில் சாரணீயம் செயற்படுகின்றது. தற்போது உலகில் 25 மில்லியன் சாரணர்கள் உள்ளனர். 1996 ம் ஆண்டில் எடுக்கப்பட்ட மதிப்பீட்டின் படி இலங்கையின் சுமாராக 25288 சாரணர்கள் உள்ளனர்.

### சாரணத்தலைமையகம்.

1920 - 1958 இங்கிலாந்திலும்
1958 - 1968 கனடாவிலுள்ள ஒட்டானிலும்.
1968 முதல் ஜெனீவாவிலும் இயங்கி வருகின்றது.

## இலங்கையில் சாரண இயக்கத்தின் வளர்ச்சி

(இலங்கையில் சாரண இயக்கம் ஆரம்பமானது பற்றிய வரலாறு)

1912 : இலங்கையில் சாரணஇயக்கம் திரு. எப்ஜீஸ்டீவின்சன் என்பவரால் மாத்தளையில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

1914 கொழும்புக்கு திரு. எப்.ஜீ. ஸ்டீவின்சனால் காலி முகத்தில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்திற்கு "சாரண இயக்கம்" கொண்டு வரப்பட்டது.

1916 ஹெவ்லொக் மைதானத்தில் மேல் மாகாணக் திரளணிக் கூட்டம் நடைபெற்றது

1917 : ஹெவ்லொக் ஓட்டத்திடலில் 1 வது அகில இலங்கைச் சாரண திரளணிக் கூட்டம் நடைபெற்றது.

1918 : கடல் சாரணீயம் ஆரம்பிக்கப்பட்டது.

1921 : இலங்கைக்கு பேடன் பவலும் அவரது பாரியாரான லேடீ ஒலெவ் பி.பீ யும் விஜயம் செய்தார்கள். திரு. புரூக் எலியட் பிரதம ஆணையாளராக நியமிக்கப்பட்டார். சிறைச்சாலையிலும் சாரண இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

1922 : நுவரேலியாப் பீதுருப் பாசறையில் முதலாவது தரு சின்னப் பயிற்சி நடைபெற்றது.

1925 : திரு. வேர்ணன் கிரேனியா பிரதம ஆணையாளராதல்.

1930 : காலி முகத்திடலில் பழைய பாராளுமன்றத்திற்கு முன்னாலுள்ள ஒரு பழைய பாதுகாப்பு நிலையத்திற்குச் சாரணர் தலைமையகம் கொண்டு செல்லப்பட்டது.

1931 : நாகொடையில் களுத்துறைச் சாரணீயப் பாசறை அமைக்கப்பட்டது.

1932 : கட்டுக்கஸ் தோட்டையில் அகில இலங்கைச் சாரணர் கைவேலை பொருட் காட்சி நடைபெற்றது. திரு. ஜே. எச். பீ ஜயவர்த்தன பிரதம ஆணையாளராதல்.

1934 : பிரபு பேடன் பவல் இரண்டாவது முறையாக இலங்கைக்கு விஜயம் செய்தார்.

1942 : திரு. கே. சோமசுந்தரம் பிரதம ஆணையாளராதல். மீரிகம சாரணப் பாசறை ஆரம்பிக்கப்பட்டது.

1948 : பீ. எம். ஐ. ஸீ. எச். இற்கு இருகில் உள்ள கூம்பிகெனேயில் இலங்கையின் முதலாவது ஜம்போறி நடைபெற்றது. சிறுவர்களுக்கான சாரணீயம் என்ற நூல் தமிழிலும் சிங்களத்திலும் வெளியிடப்பட்டது. கோ்னல் சி.பி. ஜயவர்த்தன பிரதம ஆணையாளராதல்.

1954 : திரு. ஈ. டபிள்யு கன்னங்கர பிரதம ஆணையாளராதல்.

1957 : இங்கிலாந்தில் நடைபெற்ற ஜம்போறி பொன் விழாவுக்குப் பங்கு கொள்ளல பாராளுமன்றத்தில் சாரணர் சட்டக் கோவை அங்கீகரிக்கப்பட்டது.

1962 : குதிரை ஓட்டத்திடலில் இரண்டாம் தேசிய ஜம்போறி (தங்க விழா) நடைபெற்றது.

1967 : பீட்ஸ்ரோய் திரு. எச். குணசேகர பிரதம ஆணையாளராதல்.

1972 : திரு. ஸீ. எம். பி. வணிகதுங்க பிரதம ஆணையாளராதல். வைர விழா கண்டியில் நடைபெற்றது.

1977 : திரு. எச். ஹேமபால இரத்தின சூரிய பிரதம ஆணையாளராதல்.

1982 : திரு. ரீ. செனவிரத்ன பிரதம ஆணையாளராதல். பீ.பீ. இன் 125 ஆவது பிறந்த தினத்தில் கௌரவிப்பதற்காக விசேட ஞாபகார்த்த முத்திரை வெளியிடப்பட்டது.

1983 : மூன்றாவது தேசிய ஜம்போறி அநுராதபுரத்தில் நடைபெற்றது.

1987 : திரு. ரெக்ஸ் ஜயசிங்க பிரதம ஆணையாளராதல்.

1990 : சார்க் ஜம்போறி ஆணையாளரின் இறப்பு திரு. ஜே. லயனல் சில்வா பிரதம ஆணையாளராதல். முதலாவது சார்க் சிறுவர் ஜம்போறி கொழும்பில நடைபெற்றது.

1991 : முதலாவது "இன்டாபா" பாசறை மீரிகமவில் நடைபெற்றது.

1992 : நான்காவது தேசிய ஜம்போறி குருநாகலில் நடைபெற்றது.

1993 : இரண்டாவது "இன்டாபா" பாசறை மீரிகமவில் நடைபெற்றது. நான்காவது தேசிய குருளைச் சாரணர் ஜம்போறி களுத்துறையில் நடைபெற்றது.

1994 : திரு. எம்.எம். முகைதின் பிரதம ஆணையாளராதல்.

1998 : ஐந்தாவது ஜம்போறி கண்டியில் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 1.5 பிரத்தியேகத் தினக்குறிப்பேடும் அதைப் பேணலும் PERSONAL LOG BOOK

(இதனை ஆரம்பத்தில் பேணல் பற்றித் தெரிந்து கொள்ளல்.)

இப்புத்தகம் 320 பக்கம் தொடக்கம் 400 பக்கங்களைக் கொண்ட C. R அப்பியாசப் புத்தகம் பயன்படுத்த வேண்டும். இப்புத்தகமானது சாரணர் ஒருவனுக்கு தனது சாரண வாழ்க்கையில் ஏற்படும் அநுபவங்களைக் குறித்து வைக்கும் முக்கிய குறிப்பேடாகும்.

இதில் சுயவிபரம், பாடத்திட்டம், சாரணர் கூட்டங்கள், சாரண பாசறைகள், சிரமதானங்கள், ஏனைய நிகழ்ச்சிகள், சின்னங்களுக்கான போட்டியில் சித்தியெய்தியமைக்கான விபரங்கள் என்பன அடங்கியிருத்தல் வேண்டும்.

இப்புத்தகமானது அணித்தலைவரின் வழிகாட்டலுக்கு அமைய ஆரம்பிக்கப்பட்டு சகல சாரணக் கூட்டங்களுக்கும் கொண்டு வரப்பட வேண்டும். மேலும் சகல விடயங்களும் உடனுக்குடன் எழுதப்பட்டு சாரணத்தலைவர்களின் கையொப்பம் இடப்பட்டு இருத்தல் வேண்டும்.

## 1.6 உலக சாரணிய இயக்கத்தில் அங்கத்துவம் வகிப்பது பற்றித் தெரிந்து கொள்ளல்.

அங்கத்துவம் பெற வருடா வருடம் கொடுப்பனவு செய்தல் பற்றித் தெரிந்திருத்தல் வேண்டும்.


## 1.7 சேமிப்பு

சாரணர் தமது சிறுவயது தொடக்கம் சேமிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். அநாவசியச் செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இதனை இலகுவிற் சாதிக்கலாம். சேமிப்புக் கணக்கை ஆரம்பித்து அதனை நல்ல முறையில் பேணல் வேண்டும் உதாரணமாக ஒரு சிறு தொகைப் பணத்தை வங்கியிலிடும் பழக்கத்தை ஏற்படுத்தல் வேண்டும்.

# *(2) பண்பாடு*

## 2.1 தேசியக் கொடி

தேசியக் கொடியின் நிறங்கள் பற்றித் தெரிந்திருத்தல் வேண்டும். அத்துடன் தேசியக் கொடியின் வரலாறு பற்றியும் அதன் சின்னங்கள் பற்றிய அர்த்தத்தினையும் அறிந்து கொள்ளல்.



ஒரு நாட்டின் தேசிய ஒற்றுமையை எடுத்துக் காட்டுவதற்கான ஆணித்தரமான சின்னம் தேசியக் கொடியாகும். 1948 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் திகதி அப்போது இலங்கையின் பிரதமராக இருந்த திரு டீ.எஸ். சேனநாயக்கா தேசியக் கொடியைத் திட்டமிடுவதற்காக இலங்கையில் வாழும் சகல இன மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழுவினை நியமித்தார். அதற்குத் தலைவராக திரு எஸ். டபிள்யூ ஆர். டீ . பண்டாரநாயக்காவும் ஏனையவர்களாக உனாப் பி.பி. ஐயா, திரு. ஜி.ஜி. பொன்னம்பலம், சேர் லலித் ராஜபக்ஷ, சேர் ஜோன் கொத்தலாவல, திரு ஜே. ஆர் ஜயவர்த்தன ஆகியோர் பணிபுரிந்தனர்.

இக்குழு கொண்ட தீர்மானத்தின்படியே தற்போதுள்ள தேசியக் கொடி உருவாக்கப்பட்டுள்ளது. சாரணர்களாகிய நாம் நம் நாட்டின் தேசியக் கொடிக்கு பெரும் அந்தஸ்தை வழங்க வேண்டும். ஒவ்வொரு சாரணனும் தன் நாட்டின் கொடிக்கு கொடுக்கும் மரியாதை தன்நாட்டுக்குக் கொடுக்கும் மரியாதைக்குச் சமமாகும்.

எவ்வைபவங்களிலும் தேசியக்கொடி உயர்த்தப்படும் பொழுது அதுவே முதலில் உயர வேண்டும் மற்றைய கொடிகளை விட உயரத்தில் அமைய வேண்டும்.

தேசியக் கொடியை ஏற்றும் போது சாரணர்கள் எழுந்து நிற்க வேண்டும். எக்காரணத்தையும் முன்னிட்டு தேசியக் கொடியை முழங்காலுக்கு கீழ் கொண்டு செல்லக் கூடாது. கொடியை இறக்கிய பின்பும் வணக்கம் செலுத்தவும் கூடாது.

நம் நாட்டின் தேசியக் கொடி ஒவ்வொரு காரணத்தையும் கூறி நிற்கின்றது. சுற்றியுள்ள மஞ்சட் கரையானது இலங்கை மக்களின் ஒற்றுமையையும், பச்சை முஸ்லீம் மக்களையும், செம்மஞ்சள் தமிழர்களையும், சிவப்புக்கும் செம்மஞ்சளுக்கும் இடையேயுள்ள மஞ்சள் ஏனைய சிறுபான்மையினரையும் சிவப்பு சிங்கள மக்களையும் குறிக்கின்றது. இங்கு காணப்படும் பச்சை, செம்மஞ்சள், சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறங்களின் அளவுகள் பெரிது படுத்தும் போது அதே விகிதத்தில் உருப்பெருக்கப்படவேண்டும்.

நான்கு மூலையிலுள்ள அரச இலைகள் புத்தரின் நான்கு தர்ம போதனைகளாகிய

- i) துக்கம்
- ii) துக்கத்திற்கான காரணங்கள்
- iii) அவற்றை எவ்வாறு நிவர்த்தி செய்தல்
- iv) நிர்வாணமடைதல்.

என்பவற்றைக் குறிக்கும் சிங்கத்தின் கையில் உள்ள வாள் இலங்கை மக்களின் வீரத்தையும் சித்தரிக்கின்றது. பெரும்பான்மை இனத்துக்கு ஐந்து பங்கும் ஏனைய இனங்களுக்கு இரண்டு பங்கும் என்ற அளவில் இக்கொடி பிரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இலங்கையின் சுதந்திர தினம் | 04 - 02 - 1948 |
| இலங்கையின் குடியரசு தினம் | 22 - 05 - 1972 |
| இலங்கையின் 50வது குடியரசு தினம் | 04 - 02 - 1998 |

## 2.2 தேசிய கீதம்

**தேசிய கீதத்தினை முழுமையாகத் தெரிந்திருத்தல் வேண்டும். குழுவாக அதனைச் சேர்ந்து பாடத் தெரிந்து கொள்வதுடன் எழுதவும் தெரிதல் வேண்டும்.**

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகழிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நமதலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில் கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

இலங்கையின் தேசியக் கீதமானது திரு. ஆனந்த சமரக்கோனால் இயற்றப்பட்டது. எமது தேசிய கீதம் முதன் முதலாக 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற முதலாவது சுதந்திர தினத்தில் இசைக்கப்பட்டது.

தேசிய கீதமானது இசைக்கப்படும் பொழுது சாரணர்கள் சீராக நின்று அதற்குக் கௌரவத்தை அளிக்க வேண்டும். மேலும் தேசிய கீதத்தைக் குழுவுடன் சேர்ந்து பாடத் தெரிந்திருக்க வேண்டும்.


# (3) சாரணர் கைத்திறன்

## 3.1 கட்டுக்கள்

**சாரணர் கைத்திறன் கட்டுக்களை முழுமையாக இடத் தெரிவதுடன் எவ்வெச் சந்தர்ப்பங்களுக்கு அதைப் பயன்படுத்தல் வேண்டும் என்பதையும் அறிந்து இருத்தல் வேண்டும்.**

### நேர்க்கட்டு


இது முதலுதவிச் சிகிச்சையில் கட்டுவதற்கும் கயிறுகளின் முனைகளைச் சேர்த்து முடிவதற்கும் உபயோகமாகும்.



REEF KNOT (SQUARE KNOT)

### துணிக்கட்டு


ஒரே பருமனுள்ள அல்லது வித்தியாசமான பருமனுள்ள கயிறுகளை இணைப்பதற்கு உபயோகமாகின்றது.



SHEET BEND

### முளைத் தும்புக் குளைச்சு


விறியாக்கல் வேலைகளில் கயிறுகளை மரங்களில் அல்லது கோல்களில் கட்டுவதற்கு இது உபயோகமாகும்.



CLOVE HITCH

**ஒரு வளையமும் இரண்டு ஒற்றைக் குழைச்சுக்களும்**


ஒரு தூணுடன் அல்லது கம்பத்துடன் கயிற்றொன்றைக் கட்டுவதற்கு இது உபயோகமாகும். கூடாரங்களை இழுத்துக் கட்டவும் பயன்படும்.



ROUNDTURN AND TWO HALF HITCHES

**சுருக்குக் குழைச்சு**


தளர்ந்த கயிறுகளை இறுக்கவும் நீண்ட கயிறுகளைச் சுருக்கவும் இக்கட்டு உபயோகமாகின்றது.



SHEEP SHANK

**வளையக் கட்டு**

நழுவாத ஒரு வளையத்தை உடையதாக இருக்கும் இம் முடிச்சானது ஆபத்தில் அகப்பட்டோரைப் பாதுகாக்கும் பொழுது உபயோகமாக இருக்கும்.




BOWLINE

## 3.2 குலைவுத் தடை வரிச்சு

### நுனிக்குழைவுத் தடை வரிச்சு

ஒரு கயிற்றின் முடிவிடங்கள் சிதையாமல் தவிர்ப்பதற்கு உபயோகிக்கப்படும்.



WHIPPING

## 3.3 அணிச் செயற்பாடுகள்.

அணிச் செயற்பாடு என்பது ஒரு அணி, அவ் அணித் தலைவரின் வழிகாட்டலின் கீழ் செயற்படுத்தலாகும். இங்கே அணித்தலைவரே அவ்வணியின் செயற்பாடுகளை ஒழுங்கு படுத்திச் செயற்படுத்துவார். சாரணர்கள் அதில் பங்கு எடுத்தல் வேண்டும். இவ்வாறு அணித்தலைவரின் வழிகாட்டலின் கீழ் செயற்படுத்தப்படும் முயற்சிகள் வருமாறு.

சமைத்தல், படகோட்டல், புகைப்படம் எடுத்தல், வாகனத்தினைப் பேணல், நூல் நிலைய வேலை, கணனி நிகழ்ச்சி, மின்னியல், தோட்ட வேலை, மல்யுத்தம், விளக்குகள், சமையல் அடுப்புகள், முன்னோடித் திட்டங்கள் போன்றவையாகும். இவ்செயற்பாடுகளில் ஒன்றைத் தெரிவு செய்து திட்டமிட்டுச் செயற்படல் வேண்டும்.

# 4. *சௌக்கியம்.*

## 4.1 ஆள்நிலையில் சௌக்கியம் தரும் பழக்கவழக்கங்கள்

தனிப்பட்ட சுகாதாரச் சட்டதிட்டங்களைத் தெரிந்திருந்ததுடன் பயிற்சியில் பங்கு பற்றி செயல் முறைகளை அறிந்து, அது பற்றிய அறிக்கையைச் சமர்ப்பித்தல்.

## 4.2 காயத்தைச் சுத்தம் செய்தலும் அதற்கு மருந்து கட்டலும்.

முதலிற் கைகளைச் சவர்க்காரமிட்டுக் கழுவ வேண்டும். பின் ஓர் பஞ்சை எடுத்து டெற்றோலில் தோய்த்து காயத்தின் வெளிப்புறத்தைத் துடைத்து பின் காயத்தின் உட்புறத்தை வேறோர் டெற்றோல் தோய்த்த பஞ்சினாற் துடைக்க வேண்டும். (காரணம் உள்ளே துடைத்து வெளியே துடைப்பதனால் வெளியிலுள்ள அழுக்கு மீண்டும் உட்புகும்) பின் சிறிது காயவிட்டு சிக்கற்றின் பௌவுடர் போட்டு பண்டேச் பண்ண வேண்டும். (காயத்தைக் காயவிடாது சிக்கற்றின் பௌவுடர் போட்டால் அதில் சீழ் படிந்து விடும்.) இங்கு பாவிக்கப்படும் டெற்றோலை நீருடன் ஒன்றுக்கு ஆறு என்ற விகிதத்தில் கலக்க வேண்டும்.

(*) டெற்றோலுக்குப் பதில் பாவிக்கப்படும் தொற்று நீக்கிகள்.


(1) சவலோன். (2) சேர்ஜிகள் ஸ்பிரிட். (3) ஐதரசன் பர ஒட்சைட் ($H_2O_2$)

## 4.3 தேக நிலை.

தேக நிலை என்பது சாரணனைப் பொறுத்த வரையில் மிகவும் முக்கியமானது. ஏனெனில் சாரணன் தனது தேவைகளைத் திறம்படச் செய்ய வேண்டும். அப்போது அவனால் மற்றவர்களுக்கு சேவையைச் செய்து கொடுக்க முடியும். இதற்கு அவனது உடல் நிலை மிகவும் திருப்திகரமானதாகக் காணப்படல் வேண்டும். இல்லையெனில் அவனால் எவ்விதச் செயன்முறைச் செயற்பாடுகளையும் செய்ய முடியாது. இதன் காரணமாக சாரண மாணவன் நிற்கும் நிலை, நடக்கும் நிலை, இருக்கும் நிலை என்பன முக்கியமாக கவனிக்கப்படுகின்றன. இதனைப் படவிளக்கத்தின் மூலம் தெளிவாகக் காணலாம்.

நிற்கும் போது

தலை குனிந்தும் உள் வளைந்தும் நிற்பதையும் நிமிர்ந்து உற்சாகமாக நிற்பதையும் இப்படங்கள் விளக்குகின்றன. முதற் படம் தவறான முறையையும் இரண்டாம் படம் சரியான முறையையும் எடுத்துக் காட்டுகின்றன.




### நடக்கும் போது



தலைகுனிந்து நிலம் பார்த்து, உன்னைப் பற்றி நீயே வெட்கப்பட்டு நடவாதே. சாரணன் போல் சிரித்தவாறு நிமிர்ந்து உற்சாகமாக நட.

### இருக்கும் போது



ஒரு நாற்காலியில் இருக்கும் போது நன்றாக நிமிர்ந்து உட்காருக. உள்வளைந்து முதுகை வளைத்து இருப்பது தவறானதாகும். முதலாவது படம் தவறான முறையையும் இரண்டாவது படம் சரியான முறையையும் எடுத்துக் காட்டுகின்றன.

## 4.4 கட்டளைகள்

இலகுவாக நிற்றல், கவனமாக நிற்றல், இடப்பக்கம் அல்லது வலப்பக்கம் திரும்புதல், பின்புறம் திரும்புதல், நின்ற நிலையில் காலம் குறித்தல் போன்றவற்றை செய்யப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

## 4.5 ஊதுகுழல் சமிக்கைகளும் கைச் சமிக்கைகளும்

### ஊது குழல் சமிக்கைகள்

1. நிசப்தம் ————
2. வந்து சேருங்கள் — — — — — — —
3. அணித்தலைவர் — — — ————
4. ஆபத்து — ———— — ———— —
5. விலகிச் செல்லவும் ——— ——— ———
6. சேவை அணித் தலைவர் ——— — —
7. துருப்புத்தலைவர் — — ———

குறுந்தொனி — நெடுந்தொனி ———


மேற்கூறிய சமிக்கைகளைப் பாவிக்குமுன் ஒரு நீண்ட விசில் ஊதப்பட வேண்டும்.

# கைச் சமிக்கைகள்.


1. நேர் கோட்டில் நிற்றல். (IN LINE)
2. குதிரை லாட வடிவம் (HORSE SHOE)
3. ஒடுங்கிய நிரையில் நிற்றல் (CLOSE COLUMN)
4. அகன்ற நிரையில் நிற்றல் (OPEN COLUMN)
5. "ப" வடிவம் (HOLLOW SQUARE)
6. வண்டிச் சில்லு வடிவம் (CART WHEEL)
7. நிரலாக நிற்றல் (FILE IN ROWS)
8. வட்ட வடிவம் (CIRCLE)

## கைச் சமிக்கைகள் (விளக்கக் குறிப்புப் படங்கள்)


நேர் கோட்டில் நிற்றல்.
(IN LINE)




ஒடுங்கிய நிரையில் நிற்றல்
(CLOSE COLUMN)




குதிரை லாட வடிவம்.
(HORSE SHOE)




அகன்ற நிரையில் நிற்றல்.
(OPEN COLUMN)




" ப " வடிவம்
(HOLLOW SQUARE)




வண்டிச் சில்லு வடிவம்
(CART WHEEL)



நிரலாக நிற்றல்
( FILE IN ROWS)



வட்ட வடிவம்
(CIRCLE)



♀ சாரணத் தலைவர்
⊠ கடமை அணித் தலைவர்
□ அணித்தலைவர்.
○ உதவி அணித் தலைவர்
x சாரணர்.

## 4.6 சமூக சுக நலம்

புகைத்தல், மதுபானம் அருந்துதல், போதைப் பொருளுக்கு அடிமையாதல், வெற்றிலை போடுதல் போன்றவற்றால் ஏற்படும் தீங்கு பற்றி அறிந்து அதைப் பற்றி ஓர் அறிக்கை தயாரித்தல்.

## (5) சமூகம்.

**5.1**

தன்னைச் சுற்றியுள்ள பரந்த பிரதேசம் பற்றிய ஆராய்வு. உதாரணமாக முக்கிய கட்டிடங்கள், புகையிரத நிலையம், பஸ்தரிப்பு நிலையம், வைத்திய நிலையம், தீயணைப்புக் காரியாலயம், பூந்தோட்டம், விளையாட்டு இடங்கள், பாடசாலைகள், குளிக்கும் இடங்கள், தொழிற்சாலைகள், சமய முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் என்பன பற்றி அறிந்திருத்தல்.

## (6) துணிவு சேர்செயல்கள்.

**6.1** வெளிக்கள முயற்சி

அணியினால் அல்லது துருப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட வெளிக்கள முயற்சிகளில் தீவிரமாய்ப் பங்கு பெறுதல். அவை பின்வருமாறு நடைப்பயணம், துவிச்சக்கரவண்டிப் பயணம், புதியவைகளைக் கண்டு பிடித்தல், தடைகள் தாண்டும் பயிற்சி, இயற்கையில் பிரசித்தி பெற்ற இடங்களைப் பார்வையிடல், படகோட்டல், மலையேறுதல்.

## (7) கலைச் சின்னங்கள்.

**7.1**

அங்கத்துவச் சின்னத்துக்கு இப்பதக்கங்கள் தேவையில்லை.

## (8) சேவைக் காலம்

**8.1**

இரண்டு மாத கால சேவை செய்து இருத்தல் வேண்டும் தொடர்ச்சியாக இரண்டு மாதத்திற்குக் கூட்டங்களுக்குத் தவறாது வந்து அங்கத்துவச் சின்னத்திற்கான தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

## (9) தகைமை

**9.1**

சாரணனாகச் சின்னம் சூட்டப் பெறும் மாணவன் 1 - 8 வரை கூறப்பட்ட தகைமைகள் அனைத்தையும் முறையாகப் பூர்த்தி செய்து இருத்தலுடன் ஆகக் குறைந்தது 11 வயதும் இரண்டு மாதமுமாக இருத்தல் வேண்டும்.

**9.2**

குருளைச் சாரணனாக இருந்து இணைப்புப் பதக்கம் அல்லது இணைப்பு வெகுமதி பெற்ற ஒருவர் 11 வயதிலே சாரணராகச் சின்னம் சூட்டப்படுவார்.

# சாரண விருது
# SCOUT AWARD

# சாரண விருது

(11 - 14 வயது வரை)

## 1. *கடப்பாடுகள். (Commitment)*

1.1 சாரணர் சத்தியப்பிரமாணத்திற்கும் விதிகளுக்கும் அமைய நடத்தல்.

1.2 சேமிப்புக் கணக்கு.

1.3 பிரத்தியேக தினக்குறிப்பேடு.

## 2. *பண்பாடு. (Culture)*

2.1 வெளி விருந்தினர்களும் பங்கு பற்றும் சாரணர் சம்பந்தமான கலை நிகழ்ச்சிகளில் சாரணர் பொருட்காட்சி அல்லது பாசறைத் தீயில் பங்கு பற்றியிருத்தல்.

2.2 சரித்திரம், கலாச்சாரம், அல்லது கல்வி சம்பந்தமான இடத்திற்கு ஆர்வத்துடன் சென்று அது பற்றி 200 சொற்களுக்குக் குறையாமற் கட்டுரை எழுதல்.

## 3. *சாரணர் கைத்திறன். (Scout craft)*

3.1 கட்டுக்கள்.

3.2 குலைவுத் தடைவிரிச்சு

3.3 கயிற்றுக் கலை (முன்னோடிக் கட்டுக்கள்)

3.4 திட்டம் தீட்டுதல்.
1. பாலம் கட்டுதல்.
2. கொண்டு செல்லக் கூடிய கொடிக்கம்பம் தயாரித்தல்

3.5 கொடி.

3.6 கைக் கோடரி.

3.7 வனவியல் குறியீடுகள்

3.8 திசையறி கருவி

3.9 அவதானம்.

3.10 பதினைந்து பொதுவான மரங்கள்

## 4. *சௌக்கியம். (Health)*

4.1 தேகப்பயிற்சி

4.2 அணிநடை

4.3 சமூக சுகநலப் பழக்க வழக்கங்கள்.

## 5. *சமூகம். (Society)*

5.1 அவசரத் தேவைகளுக்கு உதவுதல்.

5.2 அவசரச் செய்தி

5.3 தொலைபேசி

5.4 வழி காட்டல் (இடம் தெரியாதோர்க்கு)

## 6. *துணிவு சேர்செயல்கள். (Adventure)*

6.1 மூன்று இரவுப் பாசறை

6.2 சமைத்தல்.

6.3 நடைப் பயணம்.

## 7. *கலைச் சின்னங்கள். (Proficiency Badges)*

7.1 கலைச் சின்னங்கள் இரண்டு பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

7.2 விரும்பினால் மேலும் நான்கு கலைச் சின்னங்கள் பெறலாம்.

## 8. சேவை. (Service)

8.1. அங்கத்துவச் சின்னம் சூட்டப்பட்ட ஒன்பது மாத காலம்.

8.2 அங்கத்துவச் சின்னம் பெற்று ஆறுமாத காலத்தின் பின் மாற்றிட்டு சாரணர் விருது பெறுவதற்கு 1, 3, 6 நிகழ்ச்சிகளை முடித்தவராக இருத்தல் வேண்டும்.

## 9. தகைமை. (Eligibility)

## (1) கடப்பாடுகள்.

### 1.1 சாரணர் சத்தியப்பிரமாணத்திற்கும் விதிகளுக்கும் அமைய நடத்தல்

சாரண விருதினைப் பெறுவதைப் பொறுத்த மட்டில் சாரணமாணவன் ஒருவன் சாரண அணித்தலைவருக்கோ, சாரணத்தலைவருக்கோ தான் சாரணப் பிரமாணத்திற்கும் விதிகளுக்கும் அமைய தனது வாழ்நாளில் சிறந்த வாழ்க்கையினை நடாத்துகின்றான் என்பதை நிரூபித்துக் காட்டல் வேண்டும்.

### 1.2 சேமிப்பு

சேமிக்கும் பழக்கம் என்பது ஒருவன் சிறுகச் சிறுகச் சேமிப்பதன் மூலம் பிற்கால வாழ்க்கையில் எவ்வித பிரச்சனையுமின்றி வாழ வைக்கும். எனவே சிறு வயதில் ஆரம்பிக்கும் இப் பழக்கம் அவனது வாழ்வைச் சிறக்க வைக்கும் என்பதன் அடிப்படையில் அங்கத்துவ சின்னத்தில் ஆரம்பிக்கப்பட்ட சேமிப்புப் பழக்கமும் சேமிப்புப் புத்தகமும் தொடர்ந்தும் பேணப்படல் வேண்டும்.

### 1.3 பிரத்தியேகத் தினக்குறிப்பேடு.

சாரண விருதுகளைப் பெறுவதற்கு மிகவும் முக்கியமான அம்சம் சாரண மாணவர்கள் பிரத்தியேகத் தினக்குறிப்பேடுகளில் தமது நடவடிக்கைகளைப் பேணல். அவ்வகையில் அணியின் கூட்டங்கள், குழுவின் கூட்டங்கள், பாசறைகள், சாரணர் சம்பந்தமான குறிப்புக்கள் போன்றவை பதியப்பட்டிருத்தல் வேண்டும். இந்த விடயங்கள் யாவும் சரியான முறையில் சரியான திகதியுடன் பதியப்பட்டு, சாரணத் தலைவரின் கையொப்பமும் இடப்பட்டிருத்தல் வேண்டும். சாரணத் தலைவரின் கையொப்பம் பெறப்படும் போதுதான் பிரத்தியேக தினக்குறிப்பேடு முழுமையடையும்.

## (2) பண்பாடு

### 2.1

தனித்து ஒருவனாகத் தனது செயல்களில் ஈடுபடும்போது அவனது பண்பாடோ கலாச்சாரமோ விருத்தி அடையமாட்டாது. எனவே சாரணர் வெளியார்கள் முன்னிலையில் கலை நிகழ்ச்சி, சாரணர் பொருட்காட்சி அல்லது பாசறைத் தீ என்பவற்றில் பங்கு பற்றும் போது அவனது பழக்க வழங்கங்கள் பண்பாடு என்பன வளர்ச்சி அடைய வழி வகுக்கின்றது. எனவே இவ்வகையான ஒரு நிகழ்ச்சியில் தன்னும் பங்கு பெறல் வேண்டும்.


2.2


சரித்திரம், கலாச்சாரம் அல்லது கல்வி சம்பந்தமான இடங்களுக்குச் சென்று அதன் பண்பாடு, நயம் என்பவைகளையும், தான் பார்த்த விடயங்கள் பற்றியும் 200 சொற்களுக்கு குறையாத கட்டுரை எழுதப்பட வேண்டும்.

## *(3) சாரணர் கைத்திறன்*


### 3.1 கட்டுக்கள்.

**01. செம்படவர் முடிச்சு (Fisherman's Knot)**
ஈரமான அல்லது நழுவும் தன்மையுள்ள கயிறுகளை இணைத்துக் கட்டுவதற்கு உபயோகிக்கப்படும்.




**02. மர முடிச்சு (Timber Hitch)**
இம் முடிச்சு முக்கோணக் கட்டின் ஆரம்பத்தில் போடப்படுகின்றது. மரக்குற்றி போன்ற பொருட்கள் நழுவாது நுனியில் கட்டிவைக்கப் பயன்படும்.





**03. பண்டியிலுப்பரண் முடிச்சு (Manharness Knot)**
இழுப்புக் கயிறுகளில் இழுக்கும் வளையமாக இம் முடிச்சு உபயோகிக்கப் படுகின்றது.



### 3.2 குலைவுத் தடைவரிச்சு

மாலுமிகளின் குழைவுத் தடை வரிச்சு (Sail - maker's Whipping)






மற்றைய நுனிக் குலைவுத் தடை வரிச்சுக்களிலும் பார்க்க இக் குலைவுத் தடை வரிச்சு வலிமையானதும், பலமானதுமாகும். இதனாலேயே மாலுமிகள் இதைப் பயன்படுத்துவர்.

## 3.3 கயிற்றுக்கலை (முன்னோடிக் கட்டுக்கள்)


**01. சதுரக் கட்டு (Square Lashing)**

இக் கட்டானது இரு கம்பங்களை ஒன்றின் மேல் ஒன்றாக செங்குத்தாக வைத்து இணைத்துக் கட்டப் பயன்படும். உதாரணமாகப் பாலம் கட்டும் போது நான்கு மூலைகளிலும் இக் கட்டே பயன்படுகின்றது.




**02. முக்கோணக் கட்டு (Diagnal Lashing)**

இக்கட்டு கம்பங்களைக் குறுக்காக வைத்துக் கட்டப்பயன்படும். மரமுடிச்சுப் போட்டுத் தொடங்கி முளைத்தும்பு குழைச்சுப் போட்டு முடிக்க வேண்டும். உதாரணமாக பாலத்தின் மத்தியில் உள்ள கட்டு இதுவாகும்.




**03. கத்தரிக் கட்டு (Shear Lashing)**

இது இரு கோல்களை இணைத்து கட்டப் பயன்படும். ஒரு கோலைச் சுற்றி முளைத் தும்புக்குழச்சுப் போட்டு, பின்னர் இரு கோல்களையும் பிணைத்துச் சுற்றிக் கட்டிய பின், முளைத்தும்புக் குளைச்சை மற்றைய கோலில் இட்டு முடிக்க வேண்டும்.




## 3.4 திட்டம் தீட்டுதல்.

### 01. பாலம் கட்டுதல்.




### 02. கொண்டு செல்லக் கூடிய கொடிக் கம்பம் தயாரித்தல்.


01




02



03 கொடியைத் தயார் செய்து பறக்க விடுதல்.





04 கொடி மடிக்கும் முறைகள்.




கொடியைத் தயார் செய்து மடிக்கும் முறைகளைத் தெரிந்து கொள்வதுடன் சாரணன் ஒரு சாதாரண கொடி பறக்கும் வைபவம் ஒன்றில் கலந்து கொள்வதுடன் அதனைத் தலைமை தாங்கவும் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

3.6 # கைக் கோடரி

## கைக் கோடரியும் அதன் பயன்பாடுகளும்.




**செய்ய வேண்டியவை.**

(i) பாவிக்காத நேரத்தில் இதன் முனையை மூடி வைக்க வேண்டும்.

(ii) பாவிக்காத வேளைகளில் அதன் தலைக்கு எண்ணெய் பூச வேண்டும்.

(iii) ஒன்றை வெட்டும் முன்பும் வெட்டிய பின்பும் கோடரியைக் கூர்மையாக்கல் வேண்டும்.

(iv) வெட்டுமிடத்தை நன்கு கவனித்து வெட்ட வேண்டும்.

(v) மரத்தை வெட்டும் போது தள்ளி நின்று வெட்ட வேண்டும்.

(vi) நாம் வெட்டும் பொருளை வேறு ஒரு மரத்தின் மீது வைத்து வெட்ட வேண்டும்.

(vii) வாங்குபவருக்கு கோடரியின் தலை கிடைக்குமாறு கொடுக்க வேண்டும்.

(viii) வேறொருவருடைய கோடரியை மிகப் பத்திரமாகப் பாவிக்க வேண்டும்.

செய்யக் கூடாதவை.

(i) பால் வரும் மரங்களை வெட்டக் கூடாது.

(ii) கோடரியை வெட்டுவதைத் தவிர வேறு எதற்கும் பாவிக்கக்கூடாது.


(iii) இதை அழுத்தமற்ற தரையில் தீட்டக் கூடாது.

(iv) வெட்டும் போது "கழுத்துப் பட்டி" அல்லது சங்கிலி அணிந்திருக்கக் கூடாது.


1. கைக் கோடரி கொண்டு செல்லும் முறைகள்




2. கைக் கோடரியைக் கொடுக்கும் முறை



## 3. மரத்தை வெட்டும் முறை




## 3.7 வனவியல் குறியீடுகள்.


01. 
குறியீடு காட்டிய திசையில் செல்க.


02. 
குறிக்கப்பட்ட கிளை காட்டும் திசையை நோக்கிச் செல்க.


03. 
வளைக்கப்பட்ட புல் காட்டும் திசையில் செல்க.

04. 
சிறு கற்களைப் பின் தொடர்ந்து செல்லவும்.


05. 
ஐந்து அடி தூரத்தில் கடிதம் ஒன்று உண்டு.


06.  இங்கே நிற்கவும்.


07.  நான் வீட்டுக்குப் போய்விட்டேன்.


08.  பிரயாணம் முடிவுற்றது.


09.  அபாயம்.


10.  பாலம் உண்டு.


11.  பாலம் இல்லை.

12.  சமாதானம்.


13.  யுத்தம்.


14.  கூடாரம் அருகில் உண்டு.


15.  குடிப்பதற்கு உகந்த நீர்.


16.  குடிப்பதற்கு ஒவ்வாத நீர்.

17.  திரும்பிச் செல்லவும்.

18.  கூடாரம் திறந்துள்ளது.

19.  கூடாரம் மூடியுள்ளது.

20.  இரு குழுக்களாகப் பிரிந்து செல்க.

21.  மருத்துவமனை.

22.  காலை.


23.  நண்பகல்.

24.  மாலை.


25.  இந்து கோயில்.

26.  பள்ளிவாசல்.

27  தேவாலயம்.

28.  விகாரை.

3.8 திசையறி கருவி.



### திசையறி கருவியின் உபயோகம்.

திசையறி கருவியைப் பற்றியும் மற்றவர்களுக்கு அதனைப் பயன்படுத்தும் முறை பற்றியும் கூறத் தெரிந்தவராகவும் அதன் 16 முனைகளை அறியக் கூடிய தன்மையுடையவராகவும் திசையறி கருவியை உபயோகித்து திசைகளை நன்கு அறியக் கூடியராகவும் இருத்தல் வேண்டும்.

திசையறி கருவியின் மூலம் கடலிலோ காட்டுப் பகுதியிலோ அல்லது புதிய இடத்திலோ செல்லும் போது தாம் செல்ல வேண்டிய திசையை அறிந்து செல்ல முடியும். நடைப் பயணத்தின் போது சாரணர்கள் கட்டாயமாக இதைப் பயன்படுத்தல் வேண்டும். சாரணர்கள் போன்று மாலுமிகள், இராணுவத்தினர் தினமும் இதனைப் பயன்படுத்துவர்.

## 3.9 அவதானம்.

சாரணர்கள் என்பவர்கள் தன்னலம் கருதாமல் நேரம் காலம் என்பவற்றைப் பார்க்காமல் எந்தவித சூழ்நிலையிலும் செயற்பட வேண்டும். அதற்கு அவர்கள் அந்தச் சூழலைச் சரியாக அவதானிக்கும் தன்மையை பெற்றிருத்தல் வேண்டும். இந்த அவதானத்தை வளர்க்கும் வகையில் சாரணர் பயிற்சியில் கிம் என்பவரின் விளையாட்டு முக்கியத்துவம் வகிக்கின்றது. இந்த விளையாட்டில் 24 பொருட்களில் குறைந்தது 16 பொருட்களை 2 நிமிட அவதானத்தின் பின் ஞாபகப்படுத்தி 3நிமிடத்தில் எழுதப்பட வேண்டும்.

## 3.10 பொதுவான மரங்கள்

தம்மிடம் கிடைக்கும் ஒரு சிறிய பொருளைக் கொண்டே அதனை வடிவமைக்கத தெரிந்துள்ள சாரணர்கள பொதுவான மரங்களைப் பற்றியும் அவற்றின் பெயாகளைத் தெரிந்து இருப்பதுடன், அதனை அடையாளம் காணத் தெரிவதோடு அதனது பொருளாதார முக்கயத்துவம் , மருத்துவப் பயன்பாடு என்பவைகளையும் தெரிந்து இருத்தல் வேண்டும்.

எனவே இவைகளைப் பற்றி தனியே தெரிந்து கொள்வதோடு நிற்காமல் அதன் இலைகளை எடுத்துப் பதப்படுத்திப் பிரத்தியேகத் தினக் குறிப்பேட்டில் இலைகளை ஒட்டிக் குறிப்புகளையும் எழுதி வைத்திருத்தல் வேண்டும்.

# *(4) சௌக்கியம்*


## 4.1 ஆரோக்கியமான ஆறு அப்பியாசங்கள்.

எவ்வளவு சிறியவனாகவும் பலமற்றவனாகவும் இருப்பினும் அவன் சில அப்பியாசங்களை இடை விடாது செய்வான் ஆயின் அவன் சரீர சுகம்மிக்கவனாகக் காணப்படுவான்.


உடற்பயிற்சிகளை அதிகாலையில் காற்றோட்டம் மிக்க இடங்களில் செய்வது விரும்பத் தக்கது. தினமும் பயிற்சிகளைச் செய்யும் எண்ணிக்கைகளை கூட்டிச் செல்ல வேண்டும். மேலும் கடினமான பயிற்சிகளை உடலுக்கு ஊறு செய்யா வண்ணம் செய்தல் வேண்டும்

தெரிந்தெடுக்கப்பட்டுள்ள இலகுவான ஆறு அப்பியாச முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.


(1) முகம், தோள் ஆகியவற்றுக்குரிய பகுதி




(2) மார்புப் பகுதி





(3) கழுத்து, கைப்பகுதி




(4) முண்டப் பகுதி



(5) இடுப்புப் பகுதி



(6) காற்ப் பகுதி



### 4.2 அணி நடை

100 மீற்றர் தூரம் தனது அணியுடன் முறையாக அணி நடை செய்தல் வேண்டும்.

### 4.3 சமூக நலப் பழக்கவழக்கங்கள்.

சமூகநலப் பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ளா விட்டால் அதனால் சமூகத்தில் உள்ளவர்கள் எவ்வாறு பாதிப்பு அடைவர் என்பதனை மற்றவர்களுக்கு உணர்த்துவதோடு சாரணன் சமூகத்தில் உள்ளவர்கள் தீங்கு விளைவிக்கக்கூடிய மருந்துகளைப் பாவிக்க விடாமல் தடை செய்தல் வேண்டும். இதனால் போதைப் பழக்கங்களைக் கட்டுப்படுத்த முடியும். இதனைப் பற்றிய குறிப்பும் தினக் குறிப்பேட்டில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

## *(5) சமூகம்*

### 5.1 அவசரத் தேவைகளுக்கு உதவுதல்.

தன்னைச் சுற்றியுள்ள சூழலில் இடம் பெறும் விபத்து, நோயுறுதல் போன்ற சந்தர்ப்பங்களில் சாரணனுக்கு அவசரமாக செயற்படத் தெரிவதோடு முதலுதவிகள் பற்றியும் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும் எனவே அவை பற்றிய விரிவான குறிப்புக்கள் பின்வருமாறு.

## முதலுதவி என்றால் என்ன?

முதலுதவி பற்றி நன்றாக அறிந்த ஒருவர் ஒரு நோயாளிக்கு வைத்தியர் வரும் வரை அல்லது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வரை அந்த நோயாளியின் உயிரைக் காப்பாற்றவும் அந்நோய் பெருகாமல் இருக்கவும் அவ்வேளையில் சுற்றாடலில் இருக்கும் பொருட்களை கொண்டு செய்யும் உதவி முதலுதவி எனப்படும்.

ஒருவரின் உயிரைக் காப்பாற்றுவதற்கு அதிர்ச்சி, சுவாசம், இரத்தப் பெருக்கு (உள்ளும் வெளியும்), எலும்பு முறிவு என்பவற்றை படிப்படியாக அவதானித்தல் வேண்டும்.

## செயற்கைச் சுவாசம்.

**செயற்கைச் சுவாசம் ஐந்து வகைப்படும்.**

1. கோல்கர் நீல்சன்
2. சில்வேஸ்ரர்
3. வாய்மூக்கு
4. செபர்
5. வாய்க்கு வாய்முறை

## வாய்க்கு வாய்முறை

சுவாசக்குழாய் வழியாகச் செய்யும் சிகிச்சையில் வாய்க்கு வாய் சிறந்த முறையாகும் அதன் படிமுறைகள் பின்வருமாறு.

1) முதலுதவியாளன் தனது வாயை நன்கு திறந்து ஓர் ஆழமான உள்மூச்சை எடுத்தல்.

2) நோயாளியின் மூக்கின் கடினமான பகுதியின் கீழ் இறுக்கமாகப் பிடித்து வாயைத் திறந்து முதலுதவியாளன் தன்வாயால் நோயாளியின் வாயைச் சுற்றி மூடி நோயாளிக்கு மார்பு உயரும் வரை ஊதவும். பின் வாயை நீக்கி மார்பு தள்ளுகின்றதா என அவதானிக்க வேண்டும்.

* இம் முறை ஆரம்பத்தில் மூன்று முறை விரைவாக செய்து பின்னர் சுவாசம் சாதாரண நிலைக்கு வரும் வரை தொடர்ந்து செய்தல் வேண்டும்.

## எட்டு வகைத் தடுப்பிடங்கள்.

ஒருவருக்கு இரத்தம் வருவதைத் தடுக்க அவர் உடல்களில் எட்டு இடங்கள் உண்டு. இவை கீழ்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1. | காதுக்குக் கீழ் | 2. | தாடைக்குக் கீழ் |
| 3. | தோள்மூட்டு | 4. | கமக் கட்டு |
| 5. | கை | 6. | கால் இடுக்கணி |
| 7. | முழங்காலுக்குப் பின்பக்கம் | 8. | மணிக் கட்டு |

நாம் ஒருவருக்குத் திரிங்கு போட்டால் 15 நிமிடத்திற்கு ஒரு முறை அதனை தளர்த்தி 5 நிமிடத்தின் பின் மீண்டும் போட வேண்டும். ஒருவருக்குத் திரிங்கு போட்டால் அவர் நெற்றியில் (+) என அடையாளமிடுதல் வேண்டும்.

## சிறு விபத்துக்கள்.

### வெட்டுக் காயம்


கத்தி போன்ற கூரிய ஆயுதங்களினால் ஏற்படும். இரத்தக் குழாய்கள் முற்றாக வெட்டப்பட்டிருப்பின் இரத்தம் பாய்ந்து கொண்டிருக்கும். முதலுதவியாளன் கைகளைச் சுத்தம் செய்து கொண்ட பின் ஒரு பஞ்சை எடுத்து காயத்தின் வெளிப்புறத்தை துடைத்தல் வேண்டும் பின் வேறொரு பஞ்சினால் காயத்தின் உட்புறத்தைத் துடைத்தல் வேண்டும்.காரணம் உள்ளே துடைத்த பின் வெளிப்புறம் துடைத்தால் வெளிப்புறத்தில் உள்ள அழுக்கு உட்புறம் சென்று விடும் என்பது தான். பின்பு காயத்தைச் சிறிது நேரம் காயவிட்டு சிக்கற்றின் இட்டு பண்டேச் பண்ண வேண்டும் இதன் முடிவில் நேர்க் கட்டைப் போட வேண்டும்.

### உரோஞ்சல் காயம்.


முதலுதவியாளன் கைகளைச் சுத்தம் செய்து கொண்ட பின் பஞ்சை எடுத்து டெற்றோலில் நனைத்து விழுந்தபோது உரிந்த பக்கத்திற்கு எதிர்ப் பக்கமாக துடைத்தல் வேண்டும். பின்னர் சிறிது காயவிட்டு சிக்கற்றின் போட்டு பண்டேச் பண்ண வேண்டும்.

### பாம்பு கடித்தல்.

பாம்பு கடித்த இடத்தை வைத்து பாம்பானது விஷப்பாம்பா அல்லது விஷமில்லாப பாம்பா எனக் கண்டறியலாம். சாதாரண பாம்பு கடித்திருப்பின் பல்வரிசை இருக்கும். விஷப்பாம்பு கடித்திருப்பின் கடிவாயில் விஷப்பல் அடையாளம் இருப்பின் அது தெளிவாகத் தெரியும். ஏனைய பற்கள் ஒரு வரிசையில் இருக்கும் தெளிவாகத் தெரியாது.



விஷப்பாம்புக் கடிவாய்



விஷம் அற்ற பாம்புக் கடிவாய்

**சிகிச்சை:-**

* நோயாளியை அசையாது இருக்கச் செய்தல். (அசையின் விஷம் பரவும்)
* கடிவாயின் மேல் இறுக்கமாகக் கட்டுதல். 30 நிமிட இடைவேளைக்கு ஒரு தரம் தளர்த்தல் வேண்டும்.
* கடிபட்ட இடத்தை ஓடும் நீரில் பிடித்து சோப்பினால் கழுவ வேண்டும்.
* பின்பு கடியுண்டவரை வைத்தியரிடம் அழைத்துச் செல்லல் வேண்டும்.

### நாய் கடித்தல்.

கடித்த நாய் விசர் நாயா என்பதை அவதானித்தல் வேண்டும்.

விசர் நாயின் குணங்கள்.

* நாவிழுந்த நிலையில் ஓய்வின்றி அலைந்து திரியும்.
* பலவீனமுற்று தள்ளாடி வாயில் நுரைகக்க களைப்புற்றுத் திரியும்.
* எவரையும் எதையும் குறுக்கிடும் போது குடிக்கும்.
* பத்து நாட்களுக்குத் தான் உயிருடன் இருக்கும்.

சிகிச்சை:-

* காயத்தை நன்கு கழுவுதல் வேண்டும்.
* கடியுண்டவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று "ரெற்றனஸ் டொக்சைட்" போட வேண்டும்.
* நாயை பத்து நாளைக்கு கட்டி வைத்து அவதானித்தல் வேண்டும்.

## தேனீ, குளவி கொட்டுதல்.

இது அபாயமற்றது. முகம் உதடு போன்ற மெல்லிய இடங்களில் கொட்டினால் பாதிப்பு அதிகமாகும். நோ அதிகமாகும். ஒவ்வாமை (Alergic) அதிர்ச்சி என்பன உண்டாகலாம்.

முதலுதவிச் சிகிச்சை

* கொடுக்கை எடுக்க முடியுமாயின் எடுத்தல் வேண்டும்.
* குழவி கொட்டினால் அப்பச்சோடாவை கரைத்துப் பூசலாம்.
* தேனீ கொட்டினால் புளி அல்லது வெங்காயம் பூசலாம்.
* வலிப்பதற்கு பனடோல் எடுப்பது நன்று.
* சுடு பானம் குடிக்கக் கொடுக்கலாம்.

## மூக்கால் இரத்தம் வடிதல்.

நோயாளியை காற்றோட்டம் உள்ள யன்னலுக்கு அருகில் கதிரையில் அமரச் செய்தல் வேண்டும். பின் அவர் உடைகளைச் சிறிது தளர்த்தல் வேண்டும். தலையைப் பின்புறமாகத் தொங்கவிடல் வேண்டும். இவரை மூக்கால் சுவாசிக்காது வாயாற் சுவாசிக்கும்படி கேட்டுக் கொள்ளல் வேண்டும். அவரது மூக்கின் மேல் பனிக்கட்டி அல்லது ஈரச்சேலையை வைக்கவும். இவரை உடனடியாக வைத்தியரிடம் அழைத்துச் செல்லவும்.

## தீக்காயம்.

ஒருவர் மேல் தீ பற்றிக் கொண்டால் நாம் அவரை நிலத்திற் படுத்துப் புரளச் செய்தல் வேண்டும். அல்லாவிடின் ஈரச் சாக்கினால் அவரின் உடலை மூடி அவரில் பற்றிய தீயை அணைத்தல் வேண்டும். பின்னர் அவரது காயத்திற்கு அருகில உள்ள சட்டைத் துணிகளை வெட்டி அகற்றி அவரது காயங்களுக்கு முதலுதவி செய்ய வேண்டும்.

## நீரில் மூழ்குதல்.

நீரில் மூழ்கியவரை நீரிலிருந்து கரைக்கு எடுத்து வந்து மல்லாந்து படுக்க வைத்து அவர் அருந்தியுள்ள நீர் சுவாசப் பாதையை அடைந்திருப்பின் அடைப்பை நீக்க வேண்டும். பின் செயற்கைச் சுவாசம் அளித்து வைத்தியரை நாட வேண்டும். செயற்கைச் சுவாச முறையைச் செய்யும் போது ஈர உடைகளை மாற்ற வேண்டும்.


செயற்கைச் சுவாசம்.

செயற்கைச் சுவாசம் ஐந்து வகைப்படும்.

1. கோல்கர் நீல்சன்
2. செபர் முறை
3. சில்வேஸ்ரர்
4. வாய்மூக்கு முறை
5. வாய்க்கு வாய் முறை

ஒருவரின் சுவாச வழியானது திறந்திருக்கும் நிலை

மூடிய நிலை



நாக்கு

திறந்த நிலை




சுவாசப் பாதை


சுவாசக் குழாய் வழியாச் செய்யும் முறையில் வாய்க்குவாய் அல்லது வாய்க்கு மூக்கு என்ற முறைகள் சிறந்ததாகும்.

வாய் முகத்தில் காயம் இருப்பின் ஏனைய தவிர்க்க முடியாத நிலைகளில் சில்வேஸ்ரர் முறையை உபயோகிக்கலாம். தவறின் ஏனைய "கோல்கர் நீல்சன்" அல்லது செபர் முறையினை உபயோகிக்கலாம்.


## 1. வாய்க்கு வாய் முறை



2. செபர் முறை



3. வாய் மூக்கு முறை



4. கோல்கர் நீல்சன் முறை



5. சில்வேஸ்ரர் முறை



## உட் காயங்ககளில் இரத்த ஒழுக்கு ஏற்படின் நோயாளியில் காணப்படும் அறிகுறிகள்.

(1) நிமிர்ந்த நிலையில் முக்கியமாய் மயக்கமும் களைப்பும் ஏற்படும்.
(2) முகமும் உதடும் வெளுத்துக் காணப்படும்.
(3) தோல் உஷ்ணமின்றிப் பிசுபிசுப்பாய் இருக்கும்.
(4) மிகுந்த தாகம் உண்டாகும்.
(5) பதட்டமேற்பட்டுப் பேசுவார்.
(6) மணிக்கட்டில் உள்ள நாடித்துடிப்பு உணர முடியாத அளவில் குறைந்து காணப்படும்.
(7) சுவாசம் கொட்டாவியுடனும் பெருமூச்சுடனும் வெகு துரிதமாக இருக்கும்.

விபத்துக்குள்ளானவருக்கு இவ்வாறான அறிகுறிகள் தென்படின் அவரை உடனடியாக வைத்தியரிடம் எடுத்துச் செல்லல் வேண்டும்.

## அதிர்ச்சி

### அதிர்ச்சிக்கான அறிகுறிகள்.

(1) மயக்கமும் களைப்பும் ஏற்படும்.
(2) முகம் வெளிறிக் காணப்படும்.
(3) தோலானது குளிர்ந்து, பிசுபிசுப்பாகக் காணப்படும்.
(4) நாடித் துடிப்பானது முதலில் மெதுவாகவும், பின்னர் பலவீனமாகவும் வேகமாகவும் அடிக்கும்.
(5) வாந்தி எடுத்தல்.
(6) நினைவு இழத்தல்.

### அதிர்ச்சிக்கான சிகிச்சை

* நோயாளியின் கலக்கத்தை நீக்கி தைரியப்படுத்தல் வேண்டும்.
* கழுத்து மார்பு இடுப்பு ஆகியவற்றைச் சுற்றியுள்ள உடைகளைத் தளர்த்தல் வேண்டும்.
* அதிர்ச்சி அடைந்த நோயாளியைப் போர்வையால் போர்த்தி வைக்க வேண்டும்.
* நோயாளிக்குத் தாகமெடுப்பின் தண்ணீர் அல்லது குளிர்பானத்தைச் சிறிது சிறிதாகக் குடிக்கக்கொடுத்தல் வேண்டும்.
* நினைவு இல்லாவிடின் மணக்கும் உப்பை மணக்கக் கொடுத்து நினைவு வரச் செய்ய வேண்டும்.
* கை கால்களை விரைவாகத் தேய்த்து விட வேண்டும்.

## மின்சார அதிர்ச்சி

மின்சார அதிர்ச்சிக்குள்ளான ஒருவருக்கு கவனத்துடன் மின்தொடர்பை அகற்றி அல்லது கம்பியிலிருந்து பிரித்து அவருக்கு உடனடியாகச் செயற்கைச் சுவாசம் அளித்தல் வேண்டும்

## நஞ்சு

விஷம் உடலினுள் செல்லும் வழிகள்.

1. நுரையீரல் வழியாக - விஷவாயு
2. வாயினால் உட்கொள்ளுதல் - திரவமாக விழுங்கப்பட்ட விஷம்.
3. தோலின் ஊடாக - குத்தல், கடித்தல், கீறுதல் மூலம் உட்சென்ற விஷம்.

## சிகிச்சை முறை

1. நோயாளி சுயநிலை தவறி இருப்பின் அல்லது அவரின் உதடு வாய் என்பன வெந்திருப்பின் வாந்தி எடுக்கச் செய்ய வேண்டாம்.
2. அதிகளவு தண்ணீரைக் குடிக்கக் கொடுப்பதன் மூலம் விஷத்தின் செறிவைக் குறைக்கலாம்.
3. விஷத்தை தணிக்கச் செய்யும் பானத்தைக் கொடுத்தல்.
   (பால், பார்லி தண்ணீர், பச்சை முட்டை, தண்ணீருடன் நன்றாய்க் கலந்த மா)
4. அமில நஞ்சு அருந்தி இருப்பின் வாந்தி எடுக்கச் செய்தல் கூடாது. அதிக நீரைக் குடிக்கக் கொடுத்தல் வேண்டும். இரண்டு மேசைக்கரண்டி சோக் மில்க் ஒவ் மக்னீசியாவை ஒரு பைந் தண்ணீருட் கரைத்துக் கொடுக்கவும்.
5. கார நஞ்சு அருந்தியிருப்பின் வாந்தி எடுக்கச் செய்தல் கூடாது. அதிகளவு நீரைக் குடிக்கக் கொடுத்தல் வேண்டும். 2 மேசைக் கரண்டி எலுமிச்சம் பழச்சாறு அல்லது சிற்றிக்கமிலம் இவற்றுள் ஒன்றை ஒரு பைந் நீரில் கரைத்துக் குடிக்கக் கொடுத்தல் வேண்டும்.
6. அதிக தூக்க மாத்திரைகளை உட்கொண்டிருப்பின் ஒரு கோப்பை தண்ணீரில் இரண்டு மேசைக்கரண்டி எப்சம் உப்பைக் கரைத்துக் கொடுத்தல் வேண்டும். அதிக தூள் போட்ட கோப்பிகுடிக்கக் கொடுத்தல் வேண்டும். விழித்திருக்கச் செய்தல் வேண்டும்.

## முதலுதவிப் பெட்டியில் அவசியம் இருக்கவேண்டிய பொருட்கள்.

முக்கோண கட்டுத் துணி
பஞ்சு
சட்டை ஊசிகள்
மணக்கும் உப்பு
சாவணம் (Forceps)
சிறுநீரக வடிவத் தட்டு
குளுக்கோஸ்
சவலோன் or டெற்றோல்.
பென்சோயின்
ஐதரசன்பரஒட்சைட் ($H_2O_2$)
போர்னோல்.
பண்டேச் (Roller)
கத்தரிக்கப்பட்ட வலைத் துணி
ஒட்டக் கூடிய பிளாஸ்ரர்.
கத்தரிக் கோல்
உடல் வெப்பமானி
சவர்க்காரம்.
பனடோல்
அயடீன்
வசிலின்
ஜென்சன் வயலோட்

## 5.2 அவசரச் செய்தி.

வைத்தியசாலை, தீயணைக்கும் படை, பொலீஸ்நிலையம், அம்புலன்ஸ் சேவை, குண்டு அகற்றும் படை என்பவைகளுடன் அவை சம்பந்தமான அவசரத் தேவைகளுக்கு தொடர்புகொள்ளத் தெரிந்து இருப்பதுடன் அவைகளின் இருப்பிடம் பற்றியும் அவற்றின் தொலைபேசி இலக்கங்களும் தெரிந்திருத்தல் வேண்டும். இதனைப் பற்றிய குறிப்பும் தினக்குறிப்பேட்டில் எழுதப்படல் வேண்டும்.

## 5.3 தொலைபேசி

வீட்டில் தொலைபேசியைப் பயன்படுத்தத் தெரிவதுடன் தொலை பேசி விபரப் புத்தகத்தினைப் பார்க்கத் தெரிந்து இருத்தல் வேண்டும். மேலும் பொது இடங்களிலுள்ள தொலைபேசி, தபால் நிலையத்திலுள்ள தொலைபேசி என்பவற்றையும் பாவிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும். இவை பற்றிய குறிப்பும் தினக்குறிப்பேட்டில் இருக்க வேண்டும்.

## 5.4 வழி காட்டல்.

இடம் தெரியாத அன்னியர்களுக்கு அவர்கள் செல்லும் இடத்திற்கான வழிகாட்டத் தெரிந்திருப்பதோடு நகரத்திலுள்ள முக்கியமான கட்டிடங்கள் பிரசித்தி பெற்ற இடங்கள் போன்றவற்றைத் தெரிந்து இருத்தல் வேண்டும். அத்துடன் தாம் காட்டும் இடங்களைப் பற்றிய விபரத்தையும் அவர்களுக்குக் கூறத் தெரிந்து இருப்பதுடன் இவைகளைப் பற்றி வாய் மூலம் சாரணத்தலைவருக்கு விளக்கம் கொடுத்தல் வேண்டும்.

# *(6) துணிவு சேர்செயல்கள்.*

## 6.1 மூன்று இரவுப் பாசறை

சாரணன் தனது அணியுடனோ அல்லது குழுவுடனோ மூன்று இரவுகள் பாசறை வாசத்தில் ஈடுபடல் வேண்டும். இது தொடர்ச்சியாகவோ அல்லது தனித்தனி நாட்களாவோ இருக்கலாம்.

## 6.2 சமைத்தல்.

இயற்கைப் பொருட்களைக் கொண்டு வெளிப்புறத்தில் தீ மூட்டி தேநீரோ அல்லது கறிப்பதார்த்தமோ செய்தல்.

## 6.3 கால் நடைப் பயணம் (ஒரு நாள்)

சாரணன் உணவுப் பொருட்கள், முதலுதவி சிகிச்சைக்குரிய பொருட்களையும் கொண்டு ஒன்று அல்லது இரண்டு சாரணர்களுடன் சேர்ந்து கால்நடை மூலம் பிரயாணத்தை மேற்கொண்டுஅதைப் பற்றி ஒரு அறிக்கை தினக்குறிப்பேட்டில் பதிவு செய்து சாரணத் தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

# *(7) கலைச் சின்னங்கள்.*

## 7.1

கல்வித் தொகுதி, விளையாட்டுத் தொகுதி, சமூகத் தொகுதி, செய்முறை விஞ்ஞானத் தொகுதி, கலாச்சாரத் தொகுதி என்பவற்றிலிருந்து இரண்டு கலைச் சின்னங்கள் பெற்று இருத்தல் வேண்டும். இரண்டு பதக்கங்களில் ஒன்று பிறமொழியாளன் என்னும் பதக்கம் விரும்பத்தக்கது.

(இவை அனைத்தும் 15 வயதுக்குட்பட்டவர்கள பாடத்திட்டத்திற்கு உட்பட்டன)

## 7.2

சாரணன் விரும்பின் மேற்குறிப்பிட்ட தொகுதியிலிருந்து மேலும் நான்கு பதக்கங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

## (8) சேவைக் காலம்.

**8.1**

அங்கத்துவச் சின்னம் சூட்டப்பட்டு ஒன்பது மாத காலச் சேவைக் காலம் ஆகும்.

**8.2**

அங்கத்துவச் சின்னம் பெற்று ஆறு மாத காலத்தின் பின் மாற்றீட்டுச் சாரணன் விருது பெறுவதற்கு 1,3,6, நிகழ்ச்சிகளை முடித்தவராக இருத்தல் வேண்டும்.

## (9) தகைமைகள்.

**9.1**

12 வயது முடிந்த பின்னர் தான் சாரணர் விருதும் சாரணர் பதக்கமும் பெற்றுக் கொள்ள முடியும்.

**9.2**

மாற்றீட்டு சாரணர் விருது பெறுவதானால் 12 வயது முடிந்தவராகவும் 17 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**9.3**

மாற்றீட்டுச் சாரணர் விருது பெறச் சாரணர் 1.3.6. நிகழ்ச்சிகளை முடித்தவராக இருத்தல் வேண்டும்.

**9.4**

சாரணன் மாற்றீட்டுச் சாரணர் விருதினை மாத்திரம பெற்றிருந்தால் அவர் மாவட்ட ஆணையாளர் கட்டிமையைப் பெறுவதற்கு 14 வயது வரை காத்திருத்தல் வேண்டும்

**9.5**

14 வயதுக்குப் பின் சாரணர் சாரண விருது பெறுவதற்கான தொழிற்பாடுகளில் ஈடுபட முடியாது.

**9.6**

மாவட்ட ஆணையாளர் கட்டிமையை பெறுவதற்கு சாரணன் மாற்றீட்டுச் சாரண விருது அல்லது சாரண விருதினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

# மாவட்ட ஆணையாளர் கட்டிழை

# DISTRCT COMMISSIONER'S CORD

# மாவட்ட ஆணையாளர் கட்டிழை

(12 - 17 வயது வரை)

## *1. கடப்பாடுகள். (Commitment)*

1.1 சேமிப்பு

1.2 பிரத்தயேகத் தினக்குறிப்பேடு

1.3 அணித் தினக்குறிப்பேடு

## *2. பண்பாடு (Culture)*

2.1 பொழுது போக்குகள்.

## *3. சாரணர் கைத்திறன். (Scout craft)*

3.1 கட்டுக்கள்.

3.2 தீ மூட்டும் முறைகள்.

3.3 முன்னோடி வழியாக்கல்.

3.4 அடிச்சுவடுகள்.

3.5 வரைபடம் வரைதல்.

3.6 மதிப்பீடு

3.7 உள்ளாழி வாள், மரச் சம்மட்டி

3.8 பறவைகள்

3.9 நீச்சல்.

## *4. சௌக்கியம் (Health)*

4.1 அணி நடை

4.2 தொடர்ச்சியான நடவடிக்கைகள்

4.3 சமூக சுக நலப் பழக்கவழக்கங்கள்.

## *5. சமூகம் (Society)*

5.1 வீதி ஒழுங்கு முறையையும் குறியீடுகளையும் அறிந்திருத்தல்.

5.2 தனது வீட்டைச் சுற்றியுள்ள சூழலைப் பற்றிய ஆராய்வு.

## *6. துணிவு சேர்செயல்கள். (Adventure)*

6.1 ஏழு இரவுப் பாசறை

6.2 நடைப்பயணம்.

## *7. கலைச் சின்னங்கள். (Proficiencu Badges)*

## *8. சேவை (Service)*

## *9. தகைமை (Eligibility)*

## *(1) கடப்பாடுகள்*

### 1.1 சேமிப்பு

எதுவித இடையூறும் இன்றி தொடர்ச்சியாகச் சேமிப்பைப் பேணல்.

## 1.2 பிரத்தியேகத் தினக்குறிப்பேடு

சகல தேவையான அறிக்கைகளும் தொடர்ச்சியான நடவடிக்கைகளும் இடம் பெற்றிருத்தல் வேண்டும். இதில் கலைச் சின்னத்தினையும் விருதினைப் பெறுவதற்கும் மேற்கொள்ளப்பட்ட பரீட்சைகள் இடம்பெற்றிருத்தல் வேண்டும். இப்பிரத்தியேகத் தினக்குறிப்பேட்டில் இடம் பெற்றிருந்த பதிவுகளைக் கொண்டு குறித்த மாணவன் சாரணியத்தில் என்ன தகுதியினை அடைந்துள்ளான் என்பதைக் காணக்கூடிதாக இருக்கும்.

## 1.3 அணித் தினக்குறிப்பேடு

அணிக்குறிப்பேடு என்பது அணியினைப் பற்றியும் அணியின் நடவடிக்கைகள் பற்றியும் கூறுவது. அதில் அணியினால் மேற்கொள்ளப்பட்ட பாசறை, நடைப்பயணம், நற்செயல்களினால் கிடைக்கப்பெற்ற விருதுகள், புதிய எண்ணங்கள், செய்முறைகள், புகைப்படங்கள், வரைபடங்கள், கவிதைகள், பாடல்கள், புதினப் பத்திரிகையில் வெட்டி சேகரித்தவை போன்றவற்றின் பதிவுகள் காணப்படல் வேண்டும்.


# *(2) பண்பாடு*

## 2.1 பொழுது போக்கு

கீழே தரப்பட்டுள்ள பொழுது போக்குகளில் ஒன்றைத் தெரிவு செய்து அதில் ஆர்வத்துடன் மூன்று மாதத்திற்குக் குறையாமல் ஈடுபடல். பாண்ட் வாத்தியம், குழுப்பாடல், பாடல் குழுவில் இணைந்துபாடல், சித்திர வட்டம், எழுத்தாளர் வட்டம், கைவேலைப்பாடு வகுப்பு, நாடகக்குழு, பட்டி மன்றம் போன்றன.


# *(3) சாரணர் கைத்திறன்*

## 3.1 கட்டுக்கள்.



01. குதிரைக் கட்டு / வழிப்போக்கன் முடிச்சு
**Highwayman's hitch**

இம்முடிச்சு மரத்தில் இட்டுப் பாதுகாப்பாக இறங்கிய பின் கீழ் இருந்தே கயிற்றை இழுத்துக் கயிற்றைப் பெறுவதற்கு உதவுகின்றது.




02. தீயணைப்போன் நாற்காலி முடிச்சு
**Fireman's Chair Knot**

இது உயரத்தில் இருந்து அபாயத்தில் உள்ளோரைப் பாதுகாப்பாக கீழே கொண்டு செல்லப் பயன்படும் முடிச்சாகும்.


03. உருளும் முடிச்சு **Rolling Hitch**

முளைத்தும்புக் குழைச்சுக்கும் இணை வரி முடிச்சுக்களுக்கும் பதிலாக இம்முடிச் சினை உபயோகப்படுத்தலாம்.




04. இரட்டைத் துணிக்கட்டு
**Double Sheet Bend**

வித்தியாசமான பருமன்களை உடைய அல்லது ஈரமான கயிறுகளை இணைக்கும் போது இதன் வழுக்கும் தன்மையை நீக்க இன்னொரு வளையமிட்டு இந்தக் கட்டைப் பலப்படுத்துகின்றோம். இதனால் தான் துணிக்கட்டுக்குப் பதிலாக இந்த இரட்டைத் துணிக் கட்டை உபயோகிக்கின்றோம்.




5. சுருக்கு வளையக் கட்டு
**Bowline on bight**


வளையக் கட்டை ஒத்த பலமிக்க இரு வளைங்களைக் கொண்டு போடப்படும் முடிச்சு இதுவாகும்.




## 3.2 தீ பற்றவைக்கும் முறைகள்.




**GIPSY FIRE**
முக்காலித் தீ




**REFLECTOR FIRE**
மறுதலிப்புத் தீ






**STAR FIRE**
நட்சத்திரத் தீ


**HUNTERS FIRE**
வேட்டைக்காரன் தீ






**CRENE FIRE**
தூக்குத் தீ


**BRIDGH FIRE**
பாலத் தீ





**ALTAR FIRE**
பிரதித் தீ








**TRENCH FIRE**
பாதுகாப்பான பள்ளத்தாக்குத் தீ




**NOMAD FIRE**
நாடோடித் தீ / வண்டிக்காரன் தீ


## 3.3 கயிற்றுக்கலை (முன்னோடி வழியாக்கல்)

1. படத்தில் காட்டப்பட்டுள்ள முன்னோடி வழியாக்கல் திட்டங்களில் ஏதாவது ஒன்றில் பங்கு பற்றல் .

2. குடிசை கட்டத் தெரிந்திருத்தல் வேண்டும்.





## 3.4 அடிச் சுவடுகள்

சாரணர் தகவல்களை அறியும் முக்கிய வழிகளில் ஒன்று அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல் ஆகும். இது மிகவும் உபயோகம் உள்ள பழக்கமாவதுடன் மிகவும் சலிப்புத் தரும் பயணத்தையும் உற்சாகமுள்ளதாக மாற்றும். இதற்கு இதனைச் சிறு வயது முதலே ஆரம்பித்தல் வேண்டும்.


ஒரு தடவை ஒரு அடிச்சுவட்டை உற்றுப் பார்த்தவுடன் அச்சுட்டுக்குரியவன் என்ன வேகத்தில் நடந்திருக்க வேண்டும் என அறிய சாரணன் கற்றிருத்தல் வேண்டும்

ஒரு மனிதன் நடக்கும் போது ஒவ்வொரு பாதமும் மற்றதிலிருந்து ஒரு யார் தூரத்திற்குச் சிறிது குறைவாக இருக்கக் கூடியதாக முழுப் பாதமும் தரையில் படும்படி நடப்பான். ஓடும் பொழுது விரல்கள் தரையில் ஆழமாகப் பதிந்திருப்பதுடன் துகள்கள் சிறிது மேலே கிளம்பியும் இருக்கும். பாதங்களுக்கு இடையே உள்ள தூரம் ஒரு யாருக்கு மேற்பட்டிருக்கும். சுவடு பற்றுவோரை ஏமாற்றுவதற்காக மனிதர் சிலர் பின்புறமாக நடப்பதுமுண்டு ஆனால் உண்மையில் முறைப்படி பயிற்சி பெற்ற திறமையுடைய சாரணன் அவ்வடிச் சுவடுகள் குறுகியதாகவிருப்பதைக் கொண்டும் விரல்கள் உட்புறமாக அதிகம் சாய்ந்திருப்பதைக் கொண்டும் குதி மிகவும் அழுத்தி வைக்கப்பட்டிருப்பதைக் கொண்டு இதனை உடனே கூறி விடுவான்.


மிருகங்களைப் பொறுத்தவரையில் வேகமாக ஓடிச்செல்லும் போது அவற்றின் விரல்கள் தரையில் அதிக ஆழமாகப் பதிவதுடன் அவை அதிக தூசுகளையும் கிளப்பி விடுகின்றன. மெதுவாக நடக்கும் போது இருக்கும் அடிச்சுவடுகளிலும் பார்க்க, ஓடும் போதுள்ள அடிச்சுவடுகள் மிக நீண்டவையாக இருக்கும்.இதனைப்போல் சாதாரண மிருகங்களின் அடிச்சுவடுகளைப் பார்த்து எந்த மிருகத்தின் அடிச்சுவடு என்பதைக் கூறக் கூடியதாக இருத்தல் வேண்டும். இதனை கடற்கரைக்குச் சென்று பிளாஸ்டர் ஒவ் பரிஸ் பாவிப்பதன் மூலம் செயன்முறைப்படுத்தல் வேண்டும்.

## மனிதனின் அடிச்சுவடுகள்.


நடந்து சென்றுள்ளார்.




ஒரு பக்கம் பாரம் சுமந்து சென்றுள்ளார்.




ஓடிச் சென்றுள்ளார்.



அடிப்பாதத்தால் நடந்துள்ளார்.



பார்வையற்ற ஒருவர் நடக்கும் போது அவரின் அடிச்சுவடு பின்வருமாறு இருக்கும்.



சுருளி வண்டி ஒன்று சென்ற திசையைப் படம் குறிக்கின்றது. மண் பின்னால் வீசப்பட்டதை நோக்குக.




## 3.5 வரைபடம் வரைதல்.

சரியான அளவுத்திட்டத்தில் குறியீடுகளைப் பயன்படுத்தி திசையறி கருவியின் உதவியுடன் வரைபடம் வரைதல்.

## 3.6 மதிப்பிடல்

உயரம், நீளம், தொகை, நிறை ஆகியவற்றை மதிப்பீடு செய்யத் தெரிந்திருத்தல்.

## ஆற்றின் குறுக்கேயுள்ள தூரம்.





ஆற்றிற்கு அடுத்த திசையில் உள்ள ஒரு பொருளைக் குறித்துக் கொள்க. (X) பின் ஏதாவது ஒரு பக்கத்திற்கு செங்கோணத்தில் திரும்பி சிறிது தூரம் நடந்து இதில் ஒரு தடியை (B) நட வேண்டும். பின் அதேயளவு தூரம் தொடர்ந்து நடந்து இன்னொரு தடியை நட வேண்டும் (C). தற்போது ஆற்றுக்கு எதிர்த் திசையில் பொருள் (X) உம் தடி (B) யும் ஒரே நேர்கோட்டிற் தெரியும் வரை நடந்து அவ்விடத்தை அடையாளப்படுத்தவும்(D) வரைபடம் முக்கோணிகள் ABX, BCD இரண்டும் ஒருங்கிசைபவையாதலால் CD = AX ∴ CD ஆனது ஆற்றின் குறுக்கேயுள்ள தூரம்.

## இலகுவாக மரத்தின் உயரத்தை அளத்தல்.

ஒரு சிறிய கோல் ஒன்றினை எடுத்து அதை எமது கண்ணுக்கும் (ஒரு கண்ணை மூடியவாறு) அளக்கப் போகும் மரத்திற்கு இடையிற் பிடிக்கவும். பிடிக்கும் போது கோலின் அடி மட்டமும் நுனியும் முறையே மரத்தின் அடியுடனும் உச்சியுடனும் பொருந்துமாறு இருக்க வேண்டும். பின் கோலை கிடை மட்டத்துடன் திருப்பி கோலின் நுனி வழியாக தெரியும் இடத்தைக் குறிக்க. இக்குறிக்கப்பட்ட இடத்துக்கும் மரத்தின் அடிக்கும் இடைப்பட்ட தூரமே மரத்தின் உயரமாக இருக்கும்.

## உயரம் அளத்தல்.




ஒரு அளவு தெரிந்த கோலை எடுத்து நிலத்தில் ஊன்றுக. நிலத்தில் கண்ணை வைத்து மரத்தின் நுனியும் கோலின் நுனியும் ஒரே நேர்கோட்டில் இருக்குமாறு சரி செய்க. முறையே கோலுக்கும் கண்ணுக்கும் (a) கோலுக்கும் மரத்தின் அடிக்கும் (c) உள்ள தூரத்தை அளக்குக. கோலின் உயரம் (b) என்க. முக்கோணி PQR, PST களுக்கு ஒரே கோணம் RPQ ஆகையால்

தாலசன் விதிப்படி

$$b/a = x/(a+c)$$


$$\therefore x \text{ (மரத்தின் உயரம்)} = \frac{b(a+c)}{a}$$

## நிறையும் தொகைகளும்.

மதிப்பிடுவதனால் நிறைகளைக் கூறத் தெரிய வேண்டும். ஒரு கிராம் நிறையுள்ள கடிதம், ஒரு கிலோ நிறையுள்ள உருளைக் கிழங்கு, ஒரு சாக்கு நிறைந்த தவிடு ஆகியவற்றின் நிறைகளை மதிப்பிட்டுக் கூற வேண்டும். ஒரு மனிதனைக் கண்ணாற் பார்த்து அவன் என்ன நிறையில் இருக்கின்றான் என்பதைச் சொல்லத் தக்க நிலையில் இருத்தல் வேண்டும். இதனைப் பயிற்சியினால் மட்டுமே கற்க முடியும்.

எண்ணிக்கைகளையும் மதிப்பிடுவதனால் கூறத்தெரிய வேண்டும். ஒரு கூட்டத்தில் அல்லது ஒரு பஸ்சில் எத்தனை பேர் உள்ளனர் என்று ஒரே பார்வையில் மதிப்பிட்டுக் கூறத் தெரிய வேண்டும். ஒரு மந்தையில் எத்தனை ஆடுகள் என்றும் ஒரு தட்டில உள்ள இனிப்புக்கள் எத்தனை என்றும் பார்த்த உடனேயே சொல்லத் தெரிந்திருக்க வேண்டும். இதைப் பயிற்சியினால் கற்க முடியும்.

## 3.7 உள்ளாழி வாள்.



உள்ளாழி வாளானது சிறிய மரவேலை செய்வதற்கு சிறந்தது. கோடாலியோடு ஒப்பிடும் போது உள்ளாழியானது வெட்டும் போது மெதுவாக வெட்ட ஆரம்பித்து அதன் இலக்கைப் பிடித்த பின்னர் தான் அழுத்தி வெட்டுதல் வேண்டும். வெட்டும் போது வாளை $45^0$ முன்நோக்கி அழுத்தி வெட்டுதல் வேண்டும்.

### வெட்டும் போது கவனிக்க வேண்டியன.

01. பாவிக்காத நேரத்தில் வெட்டும் பாகத்தை எண்ணெய் பூசி மூடிவைக்க வேண்டும்.

02. ஒன்றை வெட்டு முன்னரும் ஒன்றை வெட்டிய பின்னரும் கூராக்க வேண்டும்.


03. வெட்டும் இடத்தை நன்றாகக் கவனித்து வெட்டுதல் வேண்டும்.

04. நாம் வெட்டும் பொருளை வேறு ஒரு மரத்தின் மீது வைத்து வெட்டுதல் வேண்டும்.

05. பால் வரும் மரங்களை வெட்டக் கூடாது.

06. உள்ளாழி வாளை வெட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

### மரச்சம்மட்டி



மரச் சம்மட்டியை தச்சர்களும் சிற்ப வேலை செய்பவர்களும் அதிகமாகப் பாவிப்பார்கள். சாரணர்கள் இதை முன்னோடித் திட்டங்கள் செய்யும் போதும் கூடாரங்கள் அடிக்கும் போதும் முளைகள் இறுக்கும் போதும் பயன்படுத்துவர்.

### 3.8 பறவைகள்

பத்து வெவ்வேறு இனப் பறவைகளின் நிறம், பருமன், ஆயுட்காலம், பழக்க வழக்கங்கள், இனம் பெருக்கம்செய்ய எடுக்கும் காலம் என்பவற்றை நன்கு அறிந்து அதன் படங்களை தினக்குறிப்பேட்டில் ஒட்டி இது பற்றி ஒரு சிறு அறிக்கை தயார் செய்தல் வேண்டும்.

### 3.9 நீச்சல்

35 மீற்றர் நீந்தத் தெரிந்திருத்தல் வேண்டும். அல்லது மாவட்ட ஆணையாளரின் விசேட அனுமதி பெற்று விளையாட்டு வீரன் அல்லது சிரேஷ்ட விளையாட்டு வீரன் கலைச்சின்னம் பெற்றிருத்தல் வேண்டும். ஏற்கனவே இப்பதக்கங்கள் பெற்றிருந்தால் அவைகளைச் சமர்ப்பித்தல் போதுமானது.

## (4) *சௌக்கியம்*

### 4.1 அணிநடை

200 மீற்றர் அணிநடை குழுவுடன் செய்தல் வேண்டும்.

### 4.2 தொடர்ச்சியான நடவடிக்கைகள்.

சாரணர்களுக்கு உடல் வலிமையையும் மன வலிமையையும் கொள்ளத்தக்கவாறு பின்வரும் பயிற்சிகளைக் கிரமமாக மேற்கொள்ள வேண்டும். அவை பின்வருமாறு சுவட்டு மைதான விளையாட்டு, மல்யுத்தம், யூடோ, கராட்டி, நடனம், நீச்சல், பாரம் தூக்குதல், கால் பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிரிக்கற், றகர், ஹொக்கி.

### 4.3 சமூக சுகநலப் பழக்கவழக்கங்கள்.

சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய புகைத்தல், மதுபானம் அருந்துதல், போதைவஸ்து பழக்கத்திற்கு அடிமையாதல் என்பவற்றின் தீங்கு பற்றித் தான் தெளிவாக அறிந்து கொள்வதுடன் ஏனையோரையும் அதில் ஈடுபடவிடாமல் அறிவுரை கூறலோடு இதனைப் பற்றிய குறிப்பு தினக்குறிப்பேட்டில் எழுதப்பட வேண்டும்.

## (5) சமூகம்.


**5.1**

**வீதி ஒழுங்கு முறைகளையும், குறியீடுகளையும் அறிந்து இருத்தல் வேண்டும். தனது அணியில் உள்ளோருக்கு வீதி ஒழுங்கு முறையைக் கவனமாக அவதானிக்காது விடுவதினால் ஏற்படும் விளைவு பற்றி விளக்குவதோடு, மேலும் அதனைப் பற்றிய கருத்துரை ஒன்றும் வழங்குதல் வேண்டும்.**


### வீதி ஒழுங்கு குறியீடுகள்.

**(எச்சரிக்கை செய்யும் சமிக்கைகள்)**

01 முன்னால் வலப்பக்கமாக வளைவு ஒன்று உண்டு.



02. முன்னால் இடப்பக்கமாக வளைவு ஒன்று உண்டு.




03. முன்னால் வலப்பக்கமாக இரட்டை வளைவு ஒன்று உண்டு.




04. முன்னால் இடப்பக்கமாக இரட்டை வளைவு ஒன்று உண்டு.




05. வலமிருந்து பாதை ஒன்று இணைகின்றது.




06. இடமிருந்து பாதை ஒன்று இணைகின்றது.




07. முன்னால் குறுக்கு வீதி உண்டு.




08. முன்னால் மூன்று வீதிகளின் சந்தி ஒன்று உண்டு.




09. வீதி முன்னால் ஒடுங்குகின்றது.




10. இரட்டை வண்டிப் பாதை முன்னால் முடிவடைகின்றது.



11. முன்னால் ஒடுக்கமான பாலம் உண்டு.



12. முன்னால் "T" வடிவச் சந்தி ஒன்று உண்டு.




13. முன்னால் சிறுவர் கடவை உண்டு.




14. முன்னால் பாதசாரிகள் கடவை உண்டு.




15. துவிச்சக்கர வண்டிக் கடவை முன்னால் உண்டு.




16. துவிச்சக்கர வண்டி ஒழுங்கை முன்னால் உண்டு.




17 பாதுகாப்பான புகையிரதக் கடவை முன்னால் உண்டு.




18. பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை முன்னால் உண்டு.




19. முன்னால் நிறுத்தவும்.



20. முன்னால் செல்ல வழி விடவும்.




21. சுற்றுப் பாதை ஒன்று முன்னால் உண்டு.




22. முன்னால் பாதையில் திருத்த வேலை நடைபெறுகின்றது. 

23. அபாயகரமான சரிவுப்பாதை முன்னால் உண்டு. 

24. முன்னால் கற்பாறைகள் விழும் அபாயமுண்டு. 

25. முன்னால் பாதையை மந்தைகள் கடப்பதுண்டு. 

26. வழுக்கு வீதி ஒன்று முன்னால் உண்டு. 

27. சமிக்கை விளக்கு உண்டு. 

28. முன்னால் ஓடத்துறை உள்ள வீதி. 

## ஒழுங்கு படுத்தும் சைகைகள்.(தடை செய்யும் சைகைகள்)

01. வாகனம் செல்லத் தடை. 


02. வலப்பக்கம் திரும்பத் தடை. 

03. இடப்பக்கம் திரும்பத் தடை. 

04. ஒலி எழுப்பத் தடை. 

05. "ப" முடக்குத் திருப்பத் தடை. 


06. வாகனங்கள் நிறுத்தத் தடை.



07. லொறிகளுக்கு வீதி மூடப்பட்டுள்ளது.




08. வாகனங்கள் நிறுத்தவும் தரிக்கவும் கூடாது.



09. மோட்டார் வாகனங்களுக்கு வீதி மூடப்பட்டுள்ளது.



10. சகல வாகனங்களுக்கும் வீதி மூடப்பட்டுள்ளது.




11. முந்திச் செல்லத் தடை.



12. வசு வண்டிகளுக்கு வீதி மூடப்பட்டுள்ளது.



13. ஒற்றை நாட்களில் வாகனம் நிறுத்தத் தடை.



14. இரட்டை நாட்களில் வாகனம் நிறுத்தக் கூடாது.



## பாதசாரிகளும் மிதி வண்டி ஓட்டுநர்களும் அனுசரிக்க வேண்டிய அறிவுறித்தல்கள்.

### பாதசாரிகள்

01. கால் அச்சுக்கள் இருப்பின் அதனைப் பயன்படுத்தவும் இல்லாவிடின் வீதியின் வலப்பக்கமாக நடந்து செல்லுங்கள்.
02. வீதியைக் கடப்பதாயின் தகுந்த இடத்தில், தகுந்த முறையில் கடக்க வேண்டும்.
03. வெளிச்சம் குறைந்த நேரம், மழைக்காலம் ஆகிய நேரங்களில் மிக அவதானமாக இருத்தல் வேண்டும்.
04. குருடர்கள், அங்கவீனர்கள், முதியோர்கள் ஆகியோருக்கு பாதையைக் கடப்பதற்கு உதவி புரியவும்.

05. விரையும் வசு வண்டியில் ஓடிச் சென்று ஏறவோ, நிற்கு முன் பாய்ந்து இறங்கவோ முயல வேண்டாம்.

06. வீதியில் விளையாடியோ கூட்டமாகவோ நின்று வீதியை ஜன நெருக்கடிமிக்கதாக்காதீர்.

## மிதி வண்டி ஓட்டுநர்.

01. மிதி வண்டியின் தரத்தையும் நிலையையும் உங்கள் மிதி வண்டி செலுத்தும் திறமையையும் உறுதிப்படுத்தவும்.

02. வீதியின் இடப்புறத்தைப் பாவித்துப் பிரயாணம் செய்யவும்.

03. வீதியில் ஒன்றின் பின் ஒன்றாக பிரயாணம் செய்து விபத்துக்களைத் தவிர்க்கலாம்.

04. முகப்பு விளக்கு, பின்பக்க அபாய விளக்கு ஆகியவற்றை முறையாக இரவு நேரக்களில் பாவிக்கவும்.

05. போக்குவரத்திடையே புகுந்து ஓடாதீர்.

06. நிறுத்தி வைத்திருக்கும் வாகனங்களைக் கடக்கும் போது அவற்றின் கதவுகள் திறக்கப்படும் அபாயம் இருப்பதை மறந்து விடாதீர்.

## 5.2 தனது வீட்டைச் சுற்றியுள்ள சூழலைப் பற்றிய ஆராய்வு.

தனது வீட்டைச் சுற்றியுள்ள ஒரு கிலோ மீற்றர் விட்டத்தினுள் அடங்கும் சூழலைப் பற்றி அறிந்து வைத்துக் கொள்வதோடு பிரதான கட்டிடங்களையும் குறிக்க வேண்டும். உதாரணமாகப் புகையிரத நிலையம், வைத்தியசாலை, தீயணைக்கும் படை, பொது விளையாட்டு மைதானம், குளிக்கும் இடங்கள், சமூக சேவை நிறுவனங்கள், சமய வழிபாட்டுத் தலங்கள், தொழிற்சாலை என்பவற்றைக் குறிப்பிட வேண்டும்.

# *(6) துணிவு சேர்செயல்கள்*

## 6.1 ஏழு இரவுப் பாசறை

ஏழு இரவுகள் குழுவுடன் அல்லது அணியுடன் சேர்ந்து ஆகக் குறைந்தது இரண்டு இரவுகள் தொடர்ச்சியாக பாசறை செய்து இருத்தல் வேண்டும். (வார இறுதி நாட்கள்) இது தொடர்பான அறிக்கை தினக்குறிப்பேட்டிற் பதியப்பட்டு சாரணர்த்தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## 6.2 நடைப்பயணம்.

கால் நடையாக 24 கிலோ மீற்றர் தூரம் நடைப் பயணம் செய்தல் வேண்டும். இது இரண்டு நாட்களைக் கொண்ட நடைப்பயணமாக இருக்கும். இதன் ஒரு பகுதியை முதல் நாள் செய்து அன்று கூடாரத்தில் தங்கி மறுநாள் மிகுதித் தூரத்தை முடித்தல் வேண்டும். இப்பயணத்திற்கு உதவியாக ஒரு சாரணர் அல்லது இரண்டு சாரணர்களுடன் சேர்ந்து மேற்கொள்ளல் வேண்டும். இந்நடைப்பயணம் பற்றிய விபரம் தனியான பதிவேட்டில் பதியப்பட்டிருக்க வேண்டும். இப்பதிவேட்டில் பதியப்பட வேண்டிய விபரங்கள் கீழ்வருமாறு சென்ற திகதி, நேரம், திசை, அவதானம், என்பவற்றோடு சென்ற பாதையை விளக்கும் வரைபடம் அளவுத்திட்டத்திற்கமைய வரைதல் வேண்டும்.

இந்த நடைப்பயணமே விருதுக்கான கடைசிப் பரீட்சிப்பு ஆகும். விருதுக்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்த பின்னர் மாவட்ட ஆணையாளரால் நியமிக்கப்படுவர் அவரை நடைப்பயணத்திற்கு வழி நடத்துவார்.

## (7) கலைச் சின்னங்கள்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து நான்கு கலைச்சின்னங்கள் பெறப்பட்டிருக்க வேண்டும்.

7.1

குடும்ப மகிழ்ச்சிக்குரிய பதக்கம் பெறுதல் வேண்டும்.

7.2

பாசறை கைத்திறன் பயிற்சியில் பொறுப்பாளர் தவிர்ந்த ஏதாவது பதக்கம் பெற்றிருத்தல் வேண்டும்.

7.3

தூதுக் கோஷ்டி அல்லது பொது நலம்.

7.4

முதலுதவியாளன் அல்லது அம்புலன்ஸ்.

* (15 வயதுக்கு உட்பட்டோர் அல்லது 15 வயதுக்கு மேற்பட்டோர் தமது வயதின் அடிப்படையில் பிரிவுகளாகப் பிரிந்து பதக்கங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்)
* (மேலும் நான்கு கலைச் சின்னங்களை சாரணன் விரும்பினால் பெற்றுக் கொள்ள முடியும்) அவையாவன :-

| | | |
|---|---|---|
| Venturer | - | துணிகரச் செயல். |
| Quartermaster | - | பண்டகசாலைப் பொறுப்பாளர் / உக்கிராணர் |
| Farmer group | - | விவசாயக் குழு. |
| Sea man | - | கடல் மனிதன். |
| Air man | - | வான் மனிதன். |
| Education group | - | கல்விக் குழு. |
| Culture group | - | பண்பாட்டுக் குழு. |

## (8) சேவை

8.1

சாரண விருது பெற்று ஒன்பது மாத காலம் சேவை புரிந்திருத்தல் வேண்டும்.

8.2

மாற்றீட்டு சாரண விருது மாத்திரம் பெற்றிருந்தால் 14 வயது முடிந்து ஒன்பது மாத காலசேவை செய்திருத்தல் வேண்டும்.

## (9) தகைமை

9.1

சாரண விருதினைச் சாரணன் பெற்றிருந்தால் 12 வயது முடிந்த பின்னர் அடுத்த விருதுக்கான முயற்சிகளை ஆரம்பித்தல்.

9.2

மாற்றீட்டுச் சாரண விருதினை மாத்திரம் பெற்றிருந்தால் 14 வயது முடிந்த பின்னர் தான் அடுத்த விருதிற்கான முயற்சிகளை ஆரம்பிக்கலாம்.

9.3

மாவட்ட ஆணையாளர் கட்டிழை பெற ஆகக்குறைந்தது 13 வயது தன்னும் இருத்தல் வேண்டும்

# அங்கத்துவச்சின்னம் பெறுவதற்கான மாதிரித் தேர்ச்சியறிக்கை

## அங்கத்துவச்சின்னம்.

| No | விபரம் | திகதி | பிரிவு சாரணத் தலைவரின் ஒப்பம் |
|---|---|---|---|
| 01. | சாரணர் சத்தியப்பிரமாணமும் விதிகளும். | | |
| 02. | சாரணச் சைகையும் வணக்கமும் வணக்கம் செலுத்தும் வேளைகளும். | | |
| 03. | சாரண தந்தை பேடன் பவலின் வரலாறும் உலக சாரண இயக்கத்தின் வளர்ச்சியும். | | |
| 04. | இலங்கையில் சாரண இயக்கத்தின் வளர்ச்சி. | | |
| 05. | பிரதியேகத் தினக்குறிப்பேடு. | | |
| 06. | உலக சாரணீயத்தின் அங்கத்துவம் பற்றி அறிந்திருத்தல். | | |
| 07. | சேமிப்பு. | | |
| 08. | தேசியக் கொடி. | | |
| 09. | தேசிய கீதம். | | |
| 10. | கட்டுக்கள். | | |
| 11. | குலைவுத் தடை வரிச்சு. | | |
| 12. | அணிச் செயற்பாடு. | | |
| 13. | காயத்தை சுத்தம் செய்தலும் மருந்து கட்டலும். | | |
| 14. | ஆள் நிலையில் சௌக்கியத்தைத் தரும் பழக்க வழக்கங்கள். | | |
| 15. | தேக நிலை. | | |
| 16. | கட்டளை. | | |
| 17. | அமைவுகளும் ஊது குழல் சமிக்கைகளும். | | |
| 18. | சமூக சுகநலப் பழக்க வழக்கங்கள். | | |
| 19. | தன்னைச் சுற்றியுள்ள சூழல் பற்றிய ஆராய்வு | | |
| 20. | வெளிக்கள முயற்சி. | | |
| 21. | இரண்டு மாத சேவைக் காலம். | | |

அங்கத்துவச்சின்னம் பெறுவதற்கான தகைமைகள் பிரிவுச் சாரணர் தலைவர் உறுதிப்படுத்தி சின்னத்தைப் பெற சிபாரிசு செய்தல்.

அங்கத்துவச்சின்னம் சித்தியடைந்தது.

அங்கத்துவச்சின்னம் சூட்டப்பட்டது.

# சாரண விருது பெறுவதற்கான மாதிரித் தேர்ச்சியறிக்கை

## சாரண விருது

| No | விபரம் | திகதி | பிரிவு சாரண தலைவர் ஒப் |
|---|---|---|---|
| 01. | சாரணர்சத்தியப் பிரமாணத்திற்கும் விதிகளுக்கும் அமைய நடத்தல். | | |
| 02. | சேமிப்பு. | | |
| 03. | பிரத்தியேகத் தினக்குறிப்பேடு. | | |
| 04. | வெளிப்புற நிகழ்ச்சியில் பங்கு பற்றல். | | |
| 05. | கட்டுரை எழுதுதல். | | |
| 06. | கட்டுக்கள். | | |
| 07. | குலைவுத் தடைவனகபாதமட்ரிச்சு. | | |
| 08. | முன்னோடிக் கட்டுக்கள். | | |
| 09. | பாலம் கட்டுதல். | | |
| 10. | கொண்டு செல்லக்கூடிய கொடிக் கம்பம் தயாரித்தல். | | |
| 11. | கொடி. | | |
| 12. | கைக் கோடரி. | | |
| 13. | வனவியல் குறியீடுகள். | | |
| 14. | திசையறி கருவி. | | |
| 15. | அவதானம் (கிம் விளையாட்டு). | | |
| 16. | பதினைந்து வகை பொதுவான மரங்கள். | | |
| 17. | தேகப் பயிற்சி. | | |
| 18. | அணி நடை. | | |
| 19. | சமுக சுகநலப் பழக்கவழக்கங்கள். | | |
| 20. | அவசர தேவைகளுக்கு உதவுதல். | | |
| 21. | அவசரச் செய்தி. | | |
| 22. | தொலைபேசி. | | |
| 23. | வழி காட்டல். | | |
| 24. | மூன்று இரவுப் பாசறை. | | |
| 25. | சமைத்தல். | | |
| 26. | நடைப் பயணம். | | |
| 27. | கலைச் சின்னங்கள். (i) (ii) | | |
| 28. | ஒன்பது மாத சேவை. | | |

சாரண விருது பெறுவதற்கான தகைமைகளை பிரிவுச் சாரண தலைவர் உறுதிப்படுத்திய பின் குழுத் தலைவரின் பதக்கம் பெறுவதற்கான சிபாரிசு.

சாரண விருது சித்தியடைதல்.

சாரண விருதுச் சின்னம் சூட்டப்பட்டது.

# மாவட்ட ஆணையாளர் கட்டிழை பெறுவதற்கான மாதிரித் தேர்ச்சியறிக்கை
## மாவட்ட ஆணையாளர் கட்டிழை

| No | விபரம் | திகதி | பிரிவுச் சாரணர் தலைவர் ஒப்பம் |
|---|---|---|---|
| 01. | சேமிப்பு. | | |
| 02. | பிரத்தியேகத் தினக்குறிப்பேடு. | | |
| 03. | அணித் தினக்குறிப்பேடு. | | |
| 04. | பொழுது போக்கு. | | |
| 05. | கட்டுக்கள். | | |
| 06. | தீ மூட்டும் முறைகள். | | |
| 07. | முன்னோடி வழியாக்கல். | | |
| 08. | சுவடுகள். | | |
| 09. | வரைபடம் வரைதல். | | |
| 10. | மதிப்பிடல். | | |
| 11. | கைக் கோடரி. | | |
| 12. | பத்து வகைப் பறவைகள். | | |
| 13. | நீச்சல். | | |
| 14. | அணி நடை. | | |
| 15. | தொடர்ச்சியான நடவடிக்கைகள். | | |
| 16. | சமூக சுகநலப் பழக்கவழக்கங்கள் | | |
| 17. | வீதி ஒழுங்குக் குறியீடுகள். | | |
| 18. | தனது வீட்டைச் சூழவுள்ள சூழல் பற்றிய ஆராய்வு. | | |
| 19. | ஏழு இரவுப் பாசறை. | | |
| 20. | கால் நடைப் பயணம். | | |
| | கலைச் சின்னங்கள்.<br>(i)<br>(ii)<br>(iii)<br>(iv) | | |
| 21. | ஒன்பது மாத சேவை. | | |

மாவட்ட ஆணையாளர் கட்டிழையைப் பெறுவ தற்கான தகைமைகளைப் பிரிவுச் சாரணத் தலைவர் உறுதிப்படுத்திய பின், குழுச் சாரணத் தலைவரின் சிபாரிசில் உதவி மாவட்ட ஆணை யாளரிடம் நேர்காணலுக்குச் செல்லல்.

மாவட்ட ஆணையாளர் கட்டிழை சித்தியடைந்தது.

மாவட்ட ஆணையாளர் கட்டிழை பெற்றது.

## அணி முறைமை

அணி அமைப்பின் புதிய நிகழ்ச்சித் திட்டமானது மிகவும் முன்னேற்றமானதும் முக்கியமானதாகவும் உள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் சாரணர் விருதுகளைப் பெற்றுக் கொள்ள அணி அமைப்பில் செயற்பட வேண்டும் என கட்டாயப்படுத்தப்படுகின்றது. புதிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைய நடக்கும் போது அதன் இலக்கை அடைய சிறிது காலம் எடுக்கும். என்றாலும், சாரணர் அந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமையவே தனது அணி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அதற்கு சாரணத்தலைவர்களின் உதவியைப் பெறுவதோடு அவர்களின் மேற்பார்வையின் கீழ் செயற்பட வேண்டும். அவர்களைக் கொண்டு நடாத்தும் சாரணத்தலைவர் விரும்பினால் திரிசாரணர்களையும் உதவிக்கு அழைத்துக் கொள்ளலாம்.

## அணி என்றால் என்ன?

அணி என்பது 6 தொடக்கம் 8 சாரணர்களை கொண்டதும், ஒவ்வொரு குழுவாகச் சேர்ந்து தமக்குள் ஒன்று இணைத்துச் செயற்படலாகும். இந்த ஒவ்வொரு அணிக்கும் ஒவ்வொரு அணித்தலைவர் காணப்படுவார். இந்த அணித்தலைவர் சாரணீயத்தில் சில அநுபவங்களைப் பெற்றவராகக் காணப்படுவர். இதனால் இவருக்கு அணி மாணவர்களைப் பயிற்றுவிக்கும் தன்மை இயல்பாகவே காணப்படும். இந்த அணித்தலைவரே அவர்களைப் பயிற்றுவிக்கும் பொறுப்பினை உடையவராகக் காணப்படுவதுடன் அவர்கள் விருதுகளைப் பெற்றுக் கொள்ளவும், சிபார்சு செய்யும் பொறுப்பினை உடையவராகவும் உள்ளார். தனது அணியிலுள்ள ஒவ்வொரு மாணவனிலும் தனிப்பட்ட கவனம் எடுக்கக் கடமைப்பட்டுள்ளார். அதில் தனது செயல்கள் உட்பட.

மேலும் அணித்தலைவர் அணியை அமைக்கும் போது பின்வருபவர்களை உள்ளடக்கி அணியை அமைக்கலாம். உதவி அணித்தலைவர், பண்டகசாலைப் பொறுப்பாளர், பொருளாளர், நடையாளர், செயலாளர், முதலுதவியாளர், நூல் நிலையாளர்.

## அணிகளின் சபை.

அணித்தலைவர் தொடர்ச்சியாகவும் கிரமமாகவும் தனது அணியின் கூட்டத்தைக் கூட்டுவார். இது அணிகளின் சபைக் கூட்டம் என அழைக்கப்படும். இந்தக் கூட்டங்களில் அணித்தலைவர் அணியின் செயற்பாடுகள் பற்றியும் தனது அணியில் உள்ள சாரணர்களின் விருது பெறுவதற்கான தேவைப்பாடுகள் என்பன பற்றியும் தனது அணியில் உள்ள சாரணர்களுடன் இணைந்து திட்டமிடுவர். அணித்தலைவர் தனது அணியில் உள்ள ஒவ்வொரு சாரணனதும் முன்னேற்றம், பயிற்சியில் கவனம் எடுத்தல் வேண்டும். அணிகளின் சபை சம்பந்தமான பிரச்சினைகள் பற்றி அணித் தலைவரினால் அணித்தலைவர்களின் சபைக்கு எடுக்கப்படும்.

அணிகளின் சபையில் அணியிலுள்ள சாரணர் அங்கத்துவச் சின்னம், சாரண விருதுக்கான தகைமைகளை முடித்துள்ளாரா என்பது தீர்மானிக்கப்படும். அணித்தலைவர் அணியில் உள்ள சாரணர்கள் தேவையான தேவைப்பாடுகளை பூர்த்திசெய்துள்ளனரா எனப் பார்த்து விருதுகளைச் சிபாரிசு செய்வார். இவ்வாறாக அணித்தலைவரினால் சிபாரிசு செய்யப்படும் தேர்ச்சியறிக்கையில் சாரணத்தலைவரினால் கையொப்பமிடப்படும்.

மாவட்ட ஆணையாளர்கட்டிமை, பிரதம ஆணையாளர் விருது, ஜனாதிபதி சாரணர் விருது பெறுதல் சம்பந்தமாக பெறக்கூடிய தகைமைகளை சாரணர் திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளனர் என அணித்தலைவர் திருப்தி அடைந்தால் அதனை அணித் தலைவர்களின் சபை ஊடாக சாரணத்தலைவரின் கவனத்துக்குக் கொண்டு வருதல் வேண்டும்.

## அணிகளின் சபைக்கூட்டம் நடாத்தும் முறை


1. அணித் தலைவர் இக்கூட்டத்தை தலைமைதாங்கி நடத்துவார்.
2. இக்கூட்டத்தைச் சாரணர் சத்தியப்பிரமாணத்துடன் ஆரம்பிக்கலாம்.
3. சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல்.
4. மாணவர்களின் வருகையைப் பதிதல்.
5. அணிக் காசு சேர்த்தல்.
6. சென்ற கூட்டத்தில் கற்பித்தவைகளைப் பரீட்சித்துப் பார்த்தல்.
7. விளையாட்டு
8. பாட்டு
9. விருதுகளுக்குத் தேவையான பாடவிதானத்தைப் படிப்பித்தல்.
10. அணியில் அடுத்த நடவடிக்கை பற்றிக் கலந்தாலோசித்தல்.
11. தேசிய கீதத்துடன் இக்கூட்டத்தை முடிக்கலாம்.

(இக்கூட்டம் 30 நிமிடங்கள் தொடக்கம் 45 நிமிடங்களுக்குள் முடிக்க வேண்டும்.)


## அணியின் பெயர்களும் நிறங்களும்.

ஒவ்வொரு அணியும் தமக்கு அளிக்கப்பட்ட நிலையைக் கொண்டு பெயரினைத் தெரிவு செய்யலாம். இதற்கெனப் பறவைகள் அல்லது மிருகங்களின் பெயர்களையோ அல்லது சிறந்த மனிதர்கள், தேசிய நாயகர்கள், சர்வதேச நாயகர்கள், வரலாற்று கதாநாயர்களின் பெயர்களையோ தெரிவு செய்யலாம்.

ஒவ்வொரு அணியும் இரண்டு நிறங்களை தெரிவு செய்லாம். ஆனால் 2 அணிகள் ஒரே மாதிரியான நிற ஒற்றுமையைக் கொண்டிருக்கக் கூடாது. சீருடையில் இருக்கும் போது சாரணர்கள் தமது அணியின் நிறத்தினை $3^1/_2$ சென்றி மீற்றர் வெட்டுத் துண்டுச் சதுரத்தில் 2 முக்கோணமாகப் பிரித்து அணிந்திருப்பர். இரண்டு பிரிவும் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட நிறங்கள் ஒவ்வொன்றிலும் காணப்படும். ஒட்டுப் போட்ட இத்துண்டு சீருடையில் தோள்பட்டைத் தையலுக்குக் கீழ் அண்மித்த பகுதியில் அணிதல் வேண்டும்.



## அணிக் கொடி




1. அணிக கொடியை அணிகளின் சபைக் கூட்டத்திற்கு எடுத்தச் செல்லல் வேண்டும்.
2. ஆரம்பக் கூட்டத்திற்கு எடுத்துச் செல்லல் வேண்டும்.
3. அணி மூலையில் வைத்திருக்க வேண்டும்.

அணிக் கொடியானது அந்த அணியின் இரு நிறங்களையும் உபயோகித்து தைக்கப்பட வேண்டும்.

## அணித் தலைவர் பட்டி


அணித்தலைவர் சீருடையில் இடது பக்கப் பொக்கற்றில் உலகச் சாரணர் சின்னத்திற்கு இரு புறமும் அணிதல் வேண்டும். அணித் தலைவர்கள் முறையாகப் பயிற்சி பெற முன் வெள்ளை நிறத்திலும் முறையாகப் பயிற்சி பெற்றிருந்தால் பச்சை நிறத்திலும் அணிவர்கள்.

## உதவி அணித்தலைவர் பட்டி

உதவி அணித் தலைவர் சீருடையில் இடது பக்க பொக்கற்றில் உலக சாரணர் சின்னத்திற்கு வலது பக்கத்தில் அணிந்திருக்க வேண்டும். இவர்களின் பட்டி வெள்ளை நிறத்தில் இருத்தல் வேண்டும்.

## பட்டியின் அமைப்பு

6 சென்றிமீற்றரில் இருந்து 8 சென்றிமீற்றர் வரை நீளமுள்ளதாவவும் 1 சென்றி மீற்றர் அகலம் உள்ளதாகவும் இருக்க வேண்டும்.



# அணித் தலைவர்கள் சபை

அணித்தலைவர்கள் சபை குழுவிலுள்ள அணித்தலைவர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு உருவாக்கப்படும். இதில் உதவி அணித் தலைவர்களும் பங்கு பற்றலாம். ஆனால் அணித் தலைவர்கள் தீர்மானித்தால் மாவட்ட ஆணையாளர் கட்டிழை, பிரதம ஆணையாளர் விருதையும் பெறுவதற்கான தேவைப்பாடுகளை முடித்தவர்களும், அநுபவம் வாய்ந்தவர்களும் இதில் பங்கு பெறலாம். இக்கூட்டத்திற்குத் துருப்புத் தலைவர் அல்லது ஜனாதிபதி விருது பெற்ற அணித் தலைவர்களினால் தெரிவு செய்யப்படும் ஒரு அணித்தலைவர் தலமை தாங்கலாம். இச்சபைக்கு செயலாளர், கணக்காளர் போன்றவர்களையும் தெரிவு செய்தல் வேண்டும். இக்கூட்டத்தில் கலந்தாலோசித்தவற்றை இச்சபையின் அனுமதி இன்றி வெளியிடவோ, ஏனைய சாரணர்களுடன் கலந்தாலோசிக்கவோ கூடாது.

இச்சபையில் 18 வயதுக்கு மேற்பட்ட ஜனாதிபதி விருது பெற்ற அணித்தலைவர்கள் அங்கம் வகிக்க முடியாது. இவர்கள் துருப்புத் தலைவர்களாகவும் செயற்பட முடியாது. அவர்கள் திரிசாரணர்கள் என்ற வகையில் இக்குழுவிற்கு சேவைச் சாரணராக உதவ முடியும். இச்சபையானது துருப்பின் நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிப்பதற்கு உதவியாகச் செயற்படுவதுடன் சபையினதும் துருப்பினதும் ஒழுக்கம் நன்னடத்தை என்பவற்றுக்குப் பொறுப்பாகும்.

இச்சபையின் செயற்பாடுகள் அனைத்தும் சாரணத்தலைவரின் மேற்பார்வையின் கீழ் நடைபெறும். ஆனால் இச்சபையின் தீர்மானங்கள் நிறைவேற்றும் போது எடுக்கப்படும் வாக்கெடுப்பில் சாரணத்தலைவர்கள் பங்கு பெற முடியாது. ஆனால் கருத்துச் சொல்லும் அதிகாரமுண்டு.

சாரணர் பதக்கங்களைப் பெறுவதற்கு அணித்தலைவர்கள் சாரணத்தலைவர்களுக்கு சிபாரிசு செய்யலாம். இக்கூட்டத்தைக் கூட்டும் போது கவனிக்க வேண்டியன.

01. சாரணர் கொடிமேசையில் விரிக்கப்பட்டிருக்க வேண்டும்.
02. சாரணர் சத்தியப்பிரமாணத்துடன் கூட்டத்தை ஆரம்பித்தல்.
03. இச்சபையில் சத்தியப்பிரமாணம் எடுக்கப்பட வேண்டும்.
04. செயளாளரினால் சென்ற கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டு ஒருவர் சம்மதம் என முன்மொழிய மற்றவர் அதனை வழிமொழிதல் வேண்டும்.
05. பொருளாளர் நிதி சம்பந்தமான அறிக்கை வாசித்தல்.
06. அணிக்கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்களை அணித்தலைவர் இச்சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கலாம்.
07. துருப்பு சம்பந்தமான நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடல்.
(உ+ம்) திட்டமிட்ட நிகழ்ச்சிகளை மேற்கொள்ளுவதற்கான ஆயுத்தம் பற்றிக் கலந்துரையாடல்.
08. சாரணத்தலைவரின் அறிக்கை வாசித்தல்.
09. தேசிய கீதத்துடன் இக்கூட்டத்தை முடிக்கலாம்.

## *இச்சபையின் சத்தியப்பிரமாணம்.*

*" இக்கூட்டத்தில் கலந்தாலோசித்தவற்றை*
*இச்சபையின் அனுமதி இன்றி வெளியிடமாட்டேன்*
*என்று என் கௌரவத்தின் மீது சத்தியம் செய்கிறேன் "*

இச்சபைக் கூட்டங்களுக்கு அணித்தலைவர். உதவி அணித்தலைவர் முழுச் சீருடையில் சமூகம் அளிக்க வேண்டும். சத்தியப்பிரமாணம் எடுக்கும் போது யாவரும் எழுந்து நின்று வலது தோள் மட்டத்திற்குக் கையை நீட்டி சத்தியப்பிரமாணம் எடுத்தல் வேண்டும்.


## அணித் தினக்குறிப்பேடு

அணித் தினக்குறிப்பேட்டில் அணியின் சகல செயற்பாடுகளும் கவனமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கும். ஒவ்வொரு நடவடிக்கையையும் திகதியிட்டிருத்தலுடன், விளக்கமாக அதில் பங்கு எடுத்த ஒவ்வொரு அங்கத்தவர்களினதும் பெயர்களும். அவர்கள் அதில் என்ன விதமாகப் பங்கு எடுத்துள்ளார்கள் என்பன பற்றியும் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அத்தோடு அணிகளின் சபையில் எடுத்த தீர்மானங்களும், விருதுக்கான சிபாரிசு செய்யப்பட்டவை பற்றியும் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.


தினக்குறிப்பேடானது அழகானதாகவும், அதனைப் பார்க்கும் போது ஆர்வத்துடன் பார்க்கக் கூடிய வகையிற் படங்களை வரைந்தும், சுருக்கப் பிரதிப் படங்களும், முக்கிய செய்திகளைக் கொண்ட புதினப் பத்திரிகைக் குறிப்புக்களுடனும், புகைப்படங்களையும், இன்னும் பல விடயங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.


அணியில் உள்ள அங்கத்தவர்களுள் ஒருவர் அதன் தொடர்ச்சியான குறிப்புக்களைக் பதிவு செய்ய நியமிக்கப்பட்டிருப்பார். என்றாலும் அணியின் அங்கத்தினராக உள்ள ஒவ்வொருவரும் தமது பங்களிப்பைத் தினக்குறிப்பேட்டிற்குத் தொடர்ச்சியாக வழங்கல் வேண்டும். இந்த தினக்குறிப்பேடானது மாவட்ட ஆணையாளர் அல்லது சாரணர் தேசிய தலைமையலுவகத்தினால் விருது வழங்கல் சம்பந்தமாக காலத்திற்குக் காலம் தேவைப்படும் போது காட்டப்படல் வேண்டும்.

## சீருடையைப் பராமரிக்கும் முறை



## கழுத்துப் பட்டி மடிக்கும் முறை





## அணித்தலைவர்களுக்கோர் வார்த்தை

உங்கள் அணியிலுள்ள ஒவ்வொரு சிறுவனையும் நல்லவனாகப் பயிற்று விடுவதற்குச் சாத்தியமாகுமாகையால், அணித்தலைவர்களாகிய நீங்கள், உங்கள் அணிகளிலுள்ளவர்களை நீங்களாகவே முழுப் பொறுப்புபேற்றுப் பயிற்றுவிடுவீர்களாக. ஒன்றிரண்டு திறமையுடைய சிறுவர்களையும் மற்றவர்களை ஒன்றுக்கும் உதவாதவர்களாகவும் வைத்துக் கொள்வதினால் எப்பயனும் கிடையாது. முயற்சி செய்து எல்லோரையும் திறமையுடையவர்களாக்குதல் உங்கள் கடன். இவ்விடயத்தில மிக முக்கியமானது நீங்கள் கடைப்பிடித்து நடக்கும் முறைகளாகும். உங்கள் முன்மாதிரியைப் பின்பற்றியே உங்கள் சாரணர்களும் நடப்பார்கள் ஆகையால் நீங்கள் சாதுரியமாகவும் திறமையாகவும் நடத்தல் வேண்டும். சாரணராளர் இருப்பினும் சரி, இல்லாது விடினும் சரி, கட்டளைகள் வாய்ப்பிறப்பாகவோ எழுத்து மூலமாகவோ எவ்விதமாயிருப்பினும் சரி, கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நீங்கள் நடப்பீர்கள் என்பதையும் செயலிற் காட்டி நடப்பீர்களாக. கலைச் சின்னங்களை உங்கள் முயற்சியால் நீங்கள் பெறுவீர்கள் என்பதையும் செயலிற் காட்டுக. உங்களை உங்கள் அணிச் சிறுவரும் பின்பற்றுவர். நீங்கள் அவர்களுக்கு முன்மாதிரியாக, வழிகாட்டுபவர்களாக இருப்பதேயன்றி வலு கட்டாயப்படுத்துபவர்களல்ல என்பதை என்றும் ஞாபகத்திற் கொள்க.

*LORD BADEN POWELL*

## பெற்றோருக்கு

பாசறை வசம் தான் சாரணீயத்திலே சிறுவனுக்கு அதிக கவர்ச்சி தரும். இது சிறுவனுக்கு தேகாரோக்கியத்தை அளிப்பதுடன் சுய நம்பிக்கையையும் ஆதரவையையும் போதிக்க அவகாசத்தை உதவுவதுமாகும்.


பாசறை வாசத்தினைச் செய்து அனுபவம் பெறாத சில பெற்றோர் தங்கள் சிறார்களுக்கு இவ்வாசம் மிகவும் கடினமானதாக இருக்குமெனத் தப்பபிப்பிராயங் கொள்கின்றனர். ஆனால் தங்கள் சிறார் தேகாரோக்கியமுடையவனாக, ஆண் தன்மை நிரம்பப் பெற்றும், தோழமை உணர்ச்சி பூண்டு, குண சீலர்களாகவும் திரும்பி வருதலைக் காணும் போது இத்தகைய பாசறை வாசத்தின் சீர் சிறப்புக்களையும், அதனால் தங்கள் சிறார்கள் அடையும் அநுகூலங்களையும் மதிக்காது போக மாட்டார்கள்.

இங்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள வழிகளில் சிறுவர் தம் விடுமுறையைக் கழிக்கச் செல்லுங்கள். எவ்வித இடையூறுகளையும் ஏற்படுத்த முனைய மாட்டார்களென நான் விசுவாசத்துடன் நம்புகின்றேன்.


*LORD BADEN POWELL*

## சாரணர் பதக்கங்கள்.

தேசியப் பதக்கம்



அங்கத்துவச் சின்னம்.




மாற்றீட்டுச் சாரணர் விருது





சாரணர் விருது.




மாவட்ட ஆணையாளர் கட்டிழை



பிரதம ஆணையாளர் விருது



வினைத்திறன் அலங்காரம்




ஜனாதிபதி விருது



## சாரணர் விருதிற்கான பாடத்திட்டம்.
## (தேவையான வயது, சேவை, தகைமை உள்ளடங்கியது)

| விருதுகள் | அதற்குத் தேவையான தகைமையும் அந்த நடவடிக் கைகளை உள்ளடக்கும் பகுதிகளும் | கலைச் சின்னங்கள் | அந்தந்த விருதுகளைப் பெறுவதற்கான வயதெல்லை (ஆகக்குறைந்தது) | சேவைக் காலம் | எந்த வயதெல்லையை அடைந்த பின் விருதுகளைப் பெற வேண்டும். | எந்த வயதெல்லையை அடைந்த பின் விருதுகளைப் பெற முடியாது |
|---|---|---|---|---|---|---|
| அங்கத்துவச் சின்னம் | 1 - 6 | தேவையில்லை | * 11 வயது<br>* குருளைச்சாரணன் 11 வயதில் இணைப்புச் சின்னம், பதக்கம், சாரணன் துருப்பை 10 வயது 6 மாதத்தில் பெறலாம். | 2 மாதம் | 11 வது | |
| மாற்றீட்டுச் சாரணர் விருது | 1, 2, 6 | தேவையில்லை | 11 வயதும் 2 மாதமும் | அங்கத்துவச் சின்னம் பெற்றதிலிருந்து 6 மாதம் | 12 வது | 17 வது |
| சாரணர் விருது | 1 - 6 | கலைச்சின்னங்கள் கல்வி, விளையாட்டு, கலாச்சார, சமூக, செய்முறை விருந்தான தொகுதி, பொழுது போக்குகள். | 11 வயதும் 2 மாதமும் | அங்கத்துவச் சின்னம் பெற்றதிலிருந்து 9 மாதம். | 12 வது | 14 வது |
| மாவட்ட ஆணையாளர் கட்டிறை | 1 - 6 | 4 தகுதி காண் சின்னங்கள், குடும்ப மகிழ்ச்சிக்குரியபாசறைக் கைத்திறன், உடக்கிராணம், தூதுக் கொடி அல்லது பொதுநலம் முதலுதவியாளன் அல்லது அம்புலன்ஸ். | * சாரண விருது பெற்றிருந்தால் 12 வயது<br>* இல்லையெனில் மாற்றீட்டுச் சாரண விருது பெற்றிருந்தால் 14 வயது | சாரண விருது பெற்றதிலிருந்து 9 மாதகாலம். மாற்றீட்டு விருது மாத்திரம் பெற்றிருந்தால் 14 வயது முடிந்த பின் 9 மாதகாலம். | 13 வது | 17 வது |

## 15 வயதுக்கு மேற்பட்ட சாரணன்



(1) குழுக்கழுத்துப்பட்டி

(2) கை கட்டையான சாம்பல் நிறச் சட்டை

(3) சாரணர் பட்டி

(4) கடும் நீலநிறக் காற்சட்டை

(5) கறுப்பு அல்லது மண்நிறச் சப்பாத்து

(6) குழுப்பெயர்ப் பட்டி

(7) அம்புலன்ஸ் பதக்கம்

(8) கலைச்சின்னங்கள்

(9) வினைத்திறன் அலங்காரம்

(10) தேசியக் கொடி பிற நாடுகளில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் போது

(11) மாவட்டப்பதக்கம்

(12) தேசியப்பதக்கம்

(13) அணிவர்ணம்

(14) அம்புலன்ஸ் பதக்கம்

(15) பொதுச்சேவைக் கலைச் சின்னங்கள்

(16) பிரதம ஆணையாளர் விருது அல்லது ஜனாதிபதி விருது

(17) அங்கத்துவச் சின்னம்

(18) அணித்தலைவர்பட்டி

## 15 வயதுக்கு உட்பட்ட சாரணன்




(1) குழுக்கழுத்துப் பட்டி

(2) கை கட்டையான சாம்பல் நிறச் சட்டை

(3) சாரணர் பட்டி

(4) கடும் நீலநிற அரைக் காற்சட்டை

(5) சாம்பல் நிற கால் உறை

(6) கறுப்பு அல்லது மண் நிறச் சப்பாத்து

(7) குழுப் பெயர்ப் பட்டி

(8) மாவட்ட ஆணையாளர் கட்டிழை

(9) கலைச்சின்னங்கள்

(10) தேசியக் கொடி பிற நாடுகளில் இலங்கையை பிரதிநிதித் துவப்ப டுத்தும் போது

(11) மாவட்டப்பதக்கம்

(12) தேசியப் பதக்கம்

(13) அணிவர்ணம்

(14) பொதுச் சேவைக் கலைச் சின்னங்கள்

(15) சாரணர் விருது அல்லது மாற்றீட்டுச் சாரணர் விருது

(16) அங்கத்துவச் சின்னம்

(17) அணித்தலைவர் பட்டி

ISBN 955 - 9563 - 00 9